ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஞு ஆடிமீ 10—8—53 [இதழ் 9

சீகாழி :

○

"அலையும்
பெருவெள்ளத்து
அன்றுமிதந்த
தோணிபுரம்"

○



மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
அடையாறு, சென்னை-20

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்

தருமபுர ஆதீன வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1x8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு: ...	**ரூ. 3—8—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு	ரூ. 1—5—0
காலிகோ பைண்டு: ...	**ரூ. 5—0—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு	ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஷராப்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P.O.
தஞ்சாவூர் ஜில்லா.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஸ்ரீ ஆடிமீ 10—8—53. [இதழ் 9

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

கண்கண்ட தெய்வம்

'**கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே**' என்று கலைவடிவாக எல்லார்கருத்திலும் இருந்துவிளங்கும்—விளக்கும் பராசக்தியைப் பாடுகின்றார்கள், கந்தன் அருள்பெற்ற நம்தம் குமரகுருபர சுவாமிகள். 'தெய்வம் நின்று கொல்லும்; அரசு அன்றுகொல்லும்' என்ற பழமொழியின்வண்ணம் அன்றி மக்கள் செய்யும் பாவகன்மங்களுக்கு உரிய தண்டனையைத் தெய்வம் உடனுக்குடனே கொடுத்தால்தான் மக்களுக்கு உணர்ச்சி வரும். மனிதன், என்று தெய்வத்தை மறந்தானே அன்றே மழை இவனை மறந்தது; இன்பம் விலகியது; துன்பம் பெருகியது; பசியும் பட்டினியும் மலிந்தன. மக்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தெய்வக் கலப்பும் தெய்வ நினைப்பும் இருக்குமானால் வந்த வினையும் வழிவிலகிப் போய் நம்மையெல்லாம் வாழ வைக்கும் என்பதனை இந்த ஆண்டில் அநுபவித்து வருகிறோம். சென்ற ஆண்டில் இந்தக்காலத்தில் ஐம்பத்திரண்டு அடிக்கும் குறைவாக இருந்த மேட்டூர் நீர்த்தேக்கம் இன்று அணைமட்டம் நிறைந்து வழிந்துவிழத் தொடங்கியிருக்கிறது. இவ்வளவும் எவற்றால் விளைந்தன. சிருங்கேரியில் மக்கள் யாகங்களைச் செய்யத் தொடங்கினார்கள். அதற்கு முடியாத மக்கள் அங்கங்கே பரம்பரை வாசனைப்படி கடவுளை வழிபடத்

தொடங்கினுர்கள். ஊரோடு ஒக்க ஓடும் நிலைமையிலாவது வாரவழிபாடு பிரார்த்தனைக்கூட்டங்களையும் தொடங்கினுர்கள். அங்கங்கே அபிஷேக ஆராதனைகளும் முறையாக நடந்துவருகின்றன. இவ்வாறு கடவுள் பக்தி வேரூன்றிக் கொழுந்துவிடத் தொடங்கியபோது எல்லாம்வல்ல கடவுளும் தமது பரிபூரணமான கருணையை எங்கும் பரப்பிவருகிருர். இது லோக சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மை. உறுதியுடையார் உளந் தளரார்; எல்லாம் பெறுவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கடவுள் நம்பிக்கையில் குறையாத—பராசக்தியின் பாதகமலங்களில் வைத்த மனம் வாங்காத — அன்பர்கள் சிலரும் தத்தம் இடையூறு நீங்கி இன்பம் எய்துகிருர்கள். கண் இழந்த பெண் கண் பெறுகிருள். பொருள் இழந்தவன் பொருள் பெறுகிருன். சிலர்க்குத் திருவும் கல்வியும் சேரத்தழைக்கின்றன. படுகுழி வெட்டிப் பிறரைத் தள்ளப்பார்க்கும் பகைகள், தாம் வெட்டிய படுகுழியில் தாமே வீழ்ந்து மடிகின்றன. எல்லாம் இறைவன் செயல்.

சென்ற மாதம் வைத்தீஸ்வரன்கோயிலில் நடந்த அதிசயம், 1953-ம் ஆண்டில் வியப்பான அற்புதம், மக்கள் கடவுளைப் பற்றிக் கவலைகொள்ளாத காலத்திய நிகழ்ச்சி, கருணைவடிவாகிய அம்பிகை 'என்றும் இருக்கிறேன் இருக்கிறேன்' என்று எடுத்துக் காட்டிக்கொள்ளும் செயல் 24—7—53 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குமேல் 9 மணிக்குள் நடந்ததென்றுல்—அதனைப் பலர் பார்த்து மகிழ்ந்தார்களென்றுல் அதைப்பற்றி நாம் என்ன சொல்வது! விழுப்புரம் ஸ்ரீ சேஷய்யங்கார் மகள். கமலம் என்பது அப்பெண்ணின் பெயர். வயது 17. கண் தெரியவில்லை. வயித்தியர்கள் நம்மால் முடியாது எனக் கைவிட்டுவிட்டார்கள். மாந்திரீகரை நம்பி ஆனைதாண்டவபுரத்திற்கு வந்தபோது அவரும் ஊரிலில்லாமல் நழுவிவிட்டாராம். அந்த நிலையில் வந்த அப்பெண்ணுக்கு யார்தான் கதி. கடவுள்தானே! அவ்வாறு வந்தவள் கண் பெற்றுள். தையல்நாயகியின் சந்தனக் காப்பு அலங்காரத்தைத் தரிசித்தாள். மறைந்திருந்த கண் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியின் அருளுருவத்தைக்கண்டு உய்ந்தது அல்லவா? இதனைக் கொண்டாவது கடவுளை நம்பினுேர் கைவிடப்படார் என்பதைக் கருத்தில் வையுங்கள்.

தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் போற்றுமின்!!
அன்னையின் அருளால் எல்லாம் இன்பமாம்.

காவிய விளக்கம்

(வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை.)

அற்புதத் திருவந்தாதி.

5-ம் நூற்றாண்டில் தோன்றிய காரைக்காலம்மையார் வரலாறு பெரியபுராணத்துள் சேக்கிழார் பெருமானால் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இவர் காரைக்கால் பட்டினத்தில் வாழ்ந்த பெருங்குடி வணிக மரபைச்சார்ந்த தனதத்தன் என்பாருக்கு ஒரே புதல்வியாக அவதரித்துப் புனிதவதியார் என்னும் திருநாமம் சூட்டப்பெற்றார். இவர் குழவிப் பருவத்திலிருந்தே சிவபெருமானிடம் நிறைந்த அன்புடையவராய் அழகின் கொழுந்து எழுவதென வளர்ந்தார். விளையாட்டுக்களிலும் இறைவன் திருவார்த்தைகளையே கூறி வந்தார். தக்க பருவம் வந்தவுடன் நாகைப்பட்டினத்தில் வாழ்ந்த "நிதிபதி" என்னும் வணிகன் மகனை பரமதத்தனுக்குச் சிறப்புடன் மணஞ்செய்து கொடுத்து, தனதத்தன் தன் மருமகனைக் காரைக்காலில் தன் மகளோடு இருந்து இல்லறம் நடத்த ஏற்பாடு செய்தான். புனிதவதியார் இல்லறம் நடத்துங்கால் சிவனடியார் வந்தால் அவர்களை அன்புடன் உபசரித்து நல்ல அமுதளித்துச் செம்பொன்னும் நவமணியும் தக்கவாறு அளித்துவந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் பரமதத்தன் வீட்டிற்கு அனுப்பிய இரு மாம்பழங்களில் ஒன்றைச் சிவனடியாருக்கு உணவுடன் அளித்தார். பரமதத்தன் உண்ணும்போது புனிதவதியார் வைத்த ஒரு மாம்பழத்தை உண்டபிறகு மற்றொரு பழத்தையுங் கொண்டுவா என்றான். அம்மையார் இறைவனை வேண்டி ஒரு மாங்கனி பெற்றுக்கொடுத்தார். அதை உண்ட பரமதத்தன் அதன் சுவை மிகுதியை அறிந்து 'இது யான் அனுப்பிய பழமன்று; இது எது?' என வினவ

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தார் அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.

அம்மையார் உண்மை உரைத்தார். 'அப்படியானால் இன்னொரு பழம் வரவழைத்துக்காட்டு' என்று பரமதத்தன் கேட்க, முன்போலவே அம்மையார் இறைவனை வேண்டிப் பழம்பெற்று அவன் கையிற்கொடுக்க, அப்பழம் மாயமாய் மறைந்தது. அதுகண்ட பரமதத்தன் இவ்வம்மையாரைத் தெய்வமென மதித்து மெல்லப்பிரிந்து சென்று கன்னிநாடடைந்து இரண்டாவது மணம் புரிந்து வாழ்ந்தனன்.

இதனைக் கேள்விப்பட்ட புனிதவதியாரின் சுற்றத்தார் இவ்வம்மையாரைச் சிவிகையிலேற்றி, அவனிடங்கொண்டு சேர்த்தனர். அதுகண்ட பரமதத்தன் தம் இரண்டாம் மனைவியோடும் குழந்தையோடும் புனிதவதியாரை வலம் வந்து வணங்கி, 'இவள் தெய்வம், இவளை யாவரும் வணங்குங்கள்; என் பெண் மகவுக்கு இவர் நாமத்தை வைத்துள்ளேன்' என்று சுற்றத்தாரிடங் கூறினன். அவர்கள் வெட்கி நின்றனர். புனிதவதியார் அஞ்சி அகன்று நின்று, இறைவனை நினைந்து என் கணவன் செய்கை இதுவாயின் அவன் பொருட்டுத் தாங்கியிருந்த அழகு பொருந்திய தசைப்பொதி கழித்து உன் திருவடிகளைப் போற்றும் பேய் வடிவம் வர வேண்டும்' எனத் துதித்தார். அங்ஙனமே பரமனருளால் உடம்பிலுள்ள தசையை உதறித்தள்ளி உலகெலாம் புகழும் படியான எலும்புருவாய பேய் வடிவைப் பெற்றார். பெற்ற அம்மையாருக்கு உண்மை ஞானந் தோன்றவே சிவபெருமான் மீது அற்புதத் திருவந்தாதி என்னும் நூலைப்பாடி 'இறைவன் திருவடி போற்றும் நற்கணங்களுள் ஒன்றானேன்' என மகிழ்ந்தார். பின்பு கயிலைநாதனைக்காண, கயிலைமலையை அடைந்து தலையால் நடந்துசெல்ல, இறைவன் 'அம்மையே' என்று அழைக்க, அம்மையார் 'அப்பா!' என்றார். இறைவன் அம்மை என அழைத்த காரணத்தாலும், காரைக்காலில் பிறந்த காரணத்தாலும் புனிதவதியாருக்குப் பிற்காலத்தில் காரைக்காலம்மையார் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவர், பேய்வடிவு பெற்றதால் காரைக்காற் பேயார் என்றும் வழங்கப்பெற்றனர்.

H52

அம்மையார் அற்புதத் திருவந்தாதிபாடுந் தகுதியை எங்ஙனம் பெற்றார் என்பதுபற்றி ஆராய்வோம். சேக்கிழார் பெருமான் காரைக்காலம்மையார் வரலாறு கூறுமிடத்து, அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே இறைவனை அன்புடன் நினைத்தும், அவன் புகழைப் பேசியும், அடியார்களைத் தொழுதும் வந்தாரென்று கூறுவதால், இவருடைய மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் சிவபெருமானைப் பற்றியே நிகழ்ந்தனவென்று தெரிகிறது. இவர் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டொழுகியபோதும் இறைவனிடத்து அன்பும், அவனையறியும் உணர்வும், அடியாரித்து அன்பும் உடையவராய் வாழ்ந்தாரென்பதை 'பொருவிடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருக எனவும்,' "நம்பர் அடியாரணைந்தால் நல்ல திரு அமுதளித்தும், செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான, தம்பரிவிலுலவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும், உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள்" எனவும் வரும் செய்யுட்களால் அறியலாம்.

அம்மையாருக்கு இளமையிலிருந்து வளர்ந்துவந்த கல்வியறிவுடன் கூடிய இறையுணர்வும், அடியாரன்பும், முதிர்ந்து வந்த காரணத்தால், இறையருள் துணைசெய்ய அம்மையார் இறைவனைவேண்டி இருமுறை மாங்கனி பெற்றும், கணவன் தன்னை வணங்கிய காலையில் அவன்பொருட்டுத் தாங்கிய அழகிய தசைப்பொதியினை உதிர்த்தும், சிவகணத்துள் ஒன்றாகிய பேய்வடிவு பெற்றும் அற்புதங்கள் பல செய்தார். இத்தகைய அற்புதங்கள் நிகழத் திருவருள் சுரந்த பரம்பொருளை நினைந்து உள்ளுருகித் தாம் பெற்ற அருள் அநுபவங்களையெல்லாம் 'அற்புதத்திருவந்தாதி' என்னும் நூலாக இயற்றியருளினர். சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை, தொடையழகு, நடையழகு, உவமைநயம் முதலிய எல்லாம் பொருந்தி இந்நூல் அற்புதமாயிருத்தலின் இதற்கு 'அற்புதத் திருவந்தாதி' என்னும் பெயர் வந்ததுபோலும். அம்மையார் இதற்கு இட்ட பெயர் 'வெண்பா அந்தாதிமாலை' என்பது.

H53

அந்தாதி என்பது தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அற்புதத் திருவந்தாதி நூற்றொரு நேரிசை வெண்பாக்களாலாகிய நூல். இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வந்தாதியல்லாமல் அம்மையார் இரட்டைமணி மாலை திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகங்கள் என்பனவும் இயற்றியுள்ளார்.

அம்மையார் அரனரிடங்கேட்ட வரங்களில் மிகவும் முதன்மையானது 'பிறவா வரம்'. ஏன்? இம்மானுடப் பிறவியானது நரை, திரை, பிணி, மூப்புச் சாக்காடுகட்கு இடமாகவுள்ளது. ஆதலால், ஞானிகள் பிறவியெடுப்பதைப் பிறவித் துன்பம் என்று சொல்லுவர் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும். நம் உடலுக்கு ஒருநோய் வந்தால், தக்க மருத்துவரையடைந்து அவரிடம் அன்புடன் பேசி நமது நோயைக்கூறி மருந்து வாங்கியுண்டு நோய் நீங்கப் பெறுகிறோம். அது போலவே நமது பிறவிநோய் நீங்கவேண்டுமானால் பிறப்பில் பெருமானாகிய வைத்தியநாதப் பெருமானிடம் அன்புவைத்து நமது பிறவி நோயை அகற்றும்படி வேண்டினால், அப்பெருமான் தமது பக்குவமறிந்து, பிறவியறுத்துப் பேரின்பம் அருளுவார். இம் முறைபற்றியே அம்மையார் 'பிறந்து மொழிபயிலத் தொடங்கிய காலம் முதல் உன்னிடம் பேரன்பு செலுத்தி வருகிறேன்; நீ எப்போது என் இடர் தீர்ப்பாய்' என்று முதற்பாட்டில் இறைவனைக் கேட்கிறார். அது வருமாறு :—

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப திடர் ?.

என்றார்.

எப்போது என் இடர் நீக்குவாய் என்று கேட்ட அம்மையார், உடனே இடர் நீங்கி விடவில்லை யென்று கருதி

H57

மனஞ்சலித்து இறைவன்பால் வைத்த இன்பைக் கைவிட்டாரில்லே. இறைவனிடத்து அன்பு செலுத்த வேண்டியது தமது கடமை என்றுணர்ந்தார். பலனே எதிர்பாராது ஒருவரிடம் அன்பு பாராட்டுவதே மேலோரியல்பு, ஆதலால், அம்மையார் எக்காரணத்தாலும் தனக்கு இறைவன்மீதுள்ள அன்பு நீங்காது என்பதை:—

"இடர்களேயா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ் — சுடருருவில்
என்பருக் கோலத்து எரியாடும் எம்மானுர்க்கு
அன்பரு தென்னெஞ் சவற்கு''.

என்னும் பாடலால் வெளியிட்டுள்ளார். மேலும் அவர்பால் அன்பு செலுத்துவது மட்டுமல்ல அவர்க்கே எழுபிறப்பும் அடிமையாவோமேயன்றி பிறர்க்கு ஆளாகமாட்டோம் என்று உறுதியும் கூறுகின்ருர். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்புரியும் இறைவனே! எந்தாய்! என்று இரங்கும் அடியவர்கட்கு இடர்வந்தால் அதை நீக்குவான். ஆதலால் அவன்பால் இடையருதன்பு செலுத்தி ஆளாதல் நம்மனேர் கடமை என்று நாமறியும்படியாக உளப்பாட்டுத் தன்மைப்பன்மையில் வைத்து:-

" இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிரக்கஞ் செய்வான் — இறைவனே
எந்தாயென விரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தாலது மாற்று வான்.''

என்று கூறியிருப்பது சிந்தித்து உணரத்தக்கது.

அம்மையார் இறைவனுடைய இயல்பை ஞானக்கண் கொண்டு அறிந்து அவனே அடையும் வழியை நமக்குப் பற்பல பாடல்களால் அறிவுறுத்தியுள்ளார். அவற்றைக் காண்போம், இறைவன் விண்ணுலகத்தில் உள்ளானென்றும், மண்ணுலகத்தில் உள்ளானென்றும், சேய்மையில் உள்ளானென்றும், அண்மையில் உள்ளானென்றும் கூறுவார் கூறுக. அடியவர்பொருட்டு நீலகண்டத்திருமேனி கொண்டுங் காட்சியளிக்கும் அவன் ஞான சொரூபியாய் என்னுள்ளத்திலேயுள்ளான் என்று கூறுகின்ருர். மேலும் என் நெஞ்சில் இறை

வன் குடிகொண்டிருக்கும் பேறு பெற்றதால், யானே தவ முடையேன்; என் நெஞ்சே நன்னெஞ்சம்; யானே பிறப் பறுக்க எண்ணினேன்; அவனுக்கு ஆளும் ஆயினேன்; இதுவே எனக்குப் பெறுதற்கரியதாகும். அவனருளே உலகை ஆள்வது; அவனருளே பிறப்பறுப்பது; அவனையறியும் விதியுடைய எனக்கு எப்பொருளும் அரிதல்ல; எனக்கினிய ஈசனை, யான் என்றும் மனத்தின்கண் ஓர் புதையற் பொருள் போல் வைத்துள்ளேன்; அவனை யான் தலைவனாகக்கொண்டு இன்புற்றேன்" என்று அம்மையார் நினைந்து, ஆராய்ந்து அடைதற்குரிய பொருள் இறைவனே என்பதனைப் பதினொ ராம் பாடலில்.

"ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயான் உள்ளத்தின் உள்ளடைத்தேன் — ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது."

என்று விளக்கியுள்ளார்.

(தொடரும்)

உ

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P.O.

456.

முருகக் கடவுளும் திருமுருகாற்றுப் படையும்

(தென்னுப்பிரிகா - டர்பன் - திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

முருகன் பெருமையைப் பலர் புகழவும், பல நூல்கள் கழறவும் நாமறிந்ததே. முன்பொருநாள் ஆன்மகோடிகள் செய்த தீவினைப்பயனுல் உலகில் பல இடுக்கண்கள் நேர்ந்தன, தாருகன், சூரபதுமன் முதலான அசுரர்கள் தோன்றித் தேவரும் யாவரும் நடுங்கத் தீங்குபல இயற்றலாயினர். பிரமன் விஷ்ணு முதலானோர் அவர்களை அழித்து உலகைக்காக்க முப்புரமெரித்த முதல்வனை வேண்டா நின்றனர்.

அடியார்க்கு எளியனும் அண்ணலும் அவ்வேண்டு கோளுக்கிணங்கித் தம் நெற்றிக்கண்ணினின்றும் ஓர் அழற் பிழம்பை யுண்டாக்கினுர். அதனை ஐவரில் ஒருவனும் தீ தன் அங்கையில் ஏற்றி விட, முனிவர் எழுவரும் வாங்கித் தம்மனைவியாருக்குக் கொடுத்தனர். அதனை அருந்ததி ஒழிந்த அறுவரும் விழுங்கிச் சூல் முதிர்ந்து சரவணப் பொய்கையிற், பதுமப்பாயலிலே ஆறு குழந்தைகளாகப் பெற்றனர். இதனை,

"ஐவருளொருவன் அங்கை ஏற்ப அறுவர் பயந்த
ஆறமர் செல்வ"

"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மாரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கை வேலன்றே."

என்பதால் அறியலாம்.

அறுமீன் முலையுண்டு அழுது விளையாடிக் கொண்டிருந்த முருகனை, ஒருநாள் கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் தன் தேவிக்குக் காட்டினர். அவளும் தன் இருகையால் எடுத்து அணைத்து, கந்தன் எனப் பெயரிட்டு மெய்யாறும்

ஒன்ருகச் செய்வித்தாள். பாலகுமாரனும் தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற அரிய பெரிய லீலைகள் பல புரிந்தான்.

ஒரு நாள் படைப்புத் தொழில் பூண்ட பிரமன் குமரனிடம் அகந்தையாய் உரைத்தான். முருகனும் வேதங்களுக்கு ஆதியானதும் பிரணவத்தின் உண்மைப் பொருளும் யாதென வினவினுன். பிரமன் புகலாது விழிக்க, "இது அறியாத நீ சிருட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙனம்?" எனமுனிந்து குட்டிச் சிறையிலிருத்தினன்.

இதைக்கேட்ட தந்தையாகிய திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் தமக்கும் பிரணவத்தின் பொருள் மறந்துளது, அதனை ஈண்டு எடுத்தோது எனத் தனயனைக் கேட்டுத் தாம் தெளிந்தார். இதனுல் குமரனுக்குச் சுவாமிநாதன் என ஓர் பெயரும் வழங்கலாயிற்று. இது, "திரிபுர தகனரும் வந்திக்கும் தந்தரு நாதா" என்பதாலும் "பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரம மொழிந்தோனே" என்பதாலும் விளங்கும்.

அறுமுகச் சிவனுர் அயனைச் சபித்தலின், அயன் படைத்தற்ருெழிலைத் தவிரவே, ஏனை இருவருக்கும் காத்தற்ருெழிலும் அழித்தற்ருெழிலும் இன்ருமாதலின், மூவரும் தத்தமக்குரிய தொழிலை முன்புபோல நிகழ்த்த முருகனை வேண்டலாயிற்று. இது "பலர் புகழ் மூவரும் தலைவராக" என்ற திருமுருகாற்றுப்படை அடிக்கு நச்சினுர்க்கினியர் உரையால் நன்கு விளங்கும்.

தாருகனும் மாய, கிரவுஞ்சமெனும் தடங்கிரியும் தூளாக வீரவடி வேல்விடுத்தவன்.

"வருதிகிரியோனவுணன் மார்பம் பிளந்து குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே" என்ருர் இளங்கோவடிகளும்.

பகைவர்களான சூரபதுமன், சிங்கமுகன் முதலான அவுணர் தலைவர் குலம் அறவென்று வாகை சூடியவன்.

குருதி தோய்ந்த வேலாயுதத்தைத் தரித்தவன். மூவர் குறை முடித்து, தேவர் சிறைவிடுத்து, தேவ சேனாதிபதி எனத் திகழ்ந்தவன். கானக்குறவர் களிப்படைய ஏனல்புனம் காத்திருந்த வள்ளி, தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளிக்க, உள்ளத்தில் காதல்கொண்டு அவளை மணந்தவன். அருட் கற்பினையுடைய இந்திரன் மகள் தெய்வயானையார் கணவன். கொடிய பிணிக்கு மருந்தையொத்தவன். தன்னைப் பணியும் அடியார்க்கு ஓர் விருந்தையொத்தவன். முருகா என்று ஒரு காலழைப்பார்க்கு, பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும் அச்சமகற்றும் அயில் வேலும் கச்சைத் திருவரையும் காணக் காட்சிதரும் கருணையோன்.

முற்காலத்தில் காய்சின வழுதி என்ற பாண்டியனும் அகத்தியனாரும், பல புலவர்களைக் கூட்டித் தலைச் சங்கத்தை நிலை நாட்டினர். அதில் முப்புரமெரித்த முதல்வனும், சூரனை வென்ற அறுமுகனும், நிதியின் கிழவனும், பல முனிவர்களும் அங்கத்தினர்களாயிருந்தனர்.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டிய னெனும்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

என்றபடி மதுரையம்பதியிலே சிவபிரானே இறையனார் என்னும் திருநாமத்தோடு சங்கப்புலவர்களுடன் தானும் ஓர் தமிழ்ப் புலவராயிருந்து, அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைத் தேசமெங்கும் பரவச்செய்தார். அவருடைய திருக்குமாரன்தானே அறுமுகச் சிவனாரும். விரையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா? தமிழ் வளர்த்தது மன்றி, தந்தையைப்போலவே தானும் உக்கிர குமாரன் எனப் பெயர் பூண்டு முடி புனைந்து தந்தையிடம் பெற்ற வேல், செண்டு முதலான படைகளையும்கொண்டு பாண்டிய தேசத்தைப் பலரும் புகழப் பரிபாலித்தான்.

அவனுக்குத் தன் பக்தர்களிடமுள்ள அன்பைக் காட்டிலும், தமிழ்ப் புலவர்களிடமுள்ள அன்பு அதிகம். அவர்கள் அழையாமலே தானே வலியச்சென்று, வற்புறுத்தித் தன்னைப் பாடும்படி செய்து அவர்கள் வேண்டிய வரத்தை விரைந்து கொடுப்பான். உதாரணமாக முருகன் முட்டை என்று பெயர் வைத்துக்கொண்டு, பொய்யா மொழிப் புலவரிடம் பாடல் பெற்றதும், எருமை மேய்க்கும் இடைப்பையன் வேடம் பூண்டு ஔவையிடம் பாடல் பெற்றதும் நாம் அறிந்ததே, அன்றியும் முருகன் குறிஞ்சி நிலத்திற்குரிய குரிசிலல்லவா? அதுவுமன்றி முருகனின் மணம் குணம் செயல் யாவும் பண்டைத் தமிழ்முறைப்படியே யுள்ளன என்பது, பொருளதிகார நூல்களைப் படிப்பவர்களுக்குப் புலப்படும். இனி முருகனிடம் ஆற்றுப்படுத்தும் முருகாற்றுப் படையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

வீடு பெறுதற்கு அமைந்தா னொருவனை, வீடு பெற்ருனொருவன் முருகக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் பாடியது, முருகன் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர் சோலை முதலான படை வீடுகளிலும் இருப்பன். விழாவின் கண்ணும், கந்துடை நிலையின்கண்ணும், காட்டிலும், தோட்டத்திலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், ஊருக்கு நடுவில் எல்லோரும் இருத்தற்குரிய மரத்தடியிலும் இருப்பன். இவ்விடங்களிலும் பிற இடங்களிலும் நீ காண்பாயானுல் உடனே முன்னர் கையைத் தலைமேலே வைத்து வாழ்த்திப் பின்னர், திருவடி தலையிலே படும்படி பணியவேண்டும். அப்படி நீ வணங்கினுல் முருகன் "நீ அஞ்சேல், நீ வீடுபெற நினைத்துவந்ததை யானறிவேன் எனப் பிறரால் பெறுதற்கரிய அப்பேற்றை நினக்கு (வீட்டை) தருவன்" என வீடுபெறக் கருதிய இரவலனைப் பெற்ருன் ஆற்றுப் படுத்தியதாகக் கூறுவது.

இது மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுரால் பாடப்பெற்றது. இவரியற்றிய நூல்கள் பத்துப்பாட்டில்,

திருமுருகாற்றுப் படையும், நெடுநல்வாடையும், நற்றிணை குறுந்தொகை அகநானூறு என்பனவற்றில் சிற்சில பாடல் களுமாம்.

நக்கீரர் ஒருசமயம், கண்ணுதலின் கவிக்குக் குற்றம் கூறக் கண்ணுதல் கீரனைக்கடிந்து அவருடலில் ஓர்வித வெப்பு நோயுண்டாகும்படி சபித்தார். கீரர் அந்நோயாற்ருது அடைக் கலமென்றே அண்ணலைத் துதித்தார். பரமசிவனும் பக்தனுக் கிரங்கிக் கயிலை கண்டால் அந்நோய் அழியுமென்றருளினுர்.

கீரரும் குட்டநோயுடனே பல ஊர்களையும் அரிதில் கடந்து, அதிகக் கஷ்டமடைந்து கயிலையை அடைந்தார். ஆங்குள்ள ஓர் தடாகத்தில் நீராடி நியதிமுடித்துக் கடவுளைத் துதித்திருக்கும் சமயம், ஓர் காய்பசிப்பூதம் கண்ணிற்ருேன்றிக் கீரனைக் கூற்றெனக் கவர்ந்து, காற்றெனக் கடிந்து ஓர் இருட் குகையொன்றில் இட்டுச்சென்றது. இதற்கு முன்பே அக் குகையில் இப்பூதத்தால் கவரப்பட்டோர் ஒன்று குறைய ஒராயிரத்தோரிருந்தனர். அவர்கள் இக்கீரனைக் கண்டதும், "நாங்கள் பேயால் பிடிபட்டுப் பெருஞ் சிறையிலிருந்தாலும், அந்நாள் முதல் இந்நாள்வரை, அம்தீந் தண்ணீர் அமுதோ டுண்டோம். இன்றே உன்னுல் யாவருமழிந்தோம்" என அழுது அரற்றலாயினர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாள னுன கீரனும் அவர்கள் மனக்கவலையை மாற்ற எண்ணினுர்.

குறிஞ்சி நிலத்துக்குரிய குரிசிலும், துதிப்போர் துன்பம் துடைக்கும் தூமணியுமான முருகக் கடவுளின் மனமுருகும் படி திருமுருகாற்றுப் படையைப் பாடியருளினுர். அன்பர் துயரகற்றும் அறுமுகக் கடவுளும் ஆங்குத்தோன்றி அக்கரிய பூதத்தைக் கதையால் மோதிக் கீரன் குட்டநோய்தீர அருளி னன். முருகக் கடவுளுடைய திருவருளைப்பெற விரும்புவோர் இத்திருமுருகாற்றுப்படையைத் தினம் அன்புடன் பாரா யணம் பண்ணுதல் நலம்.

461

சோம்பலும் ஊக்கமும்

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

மக்கள் உள்ளமானது யாதேனும் ஒன்றினில் எழுச்சி கொள்வது இயல்பாயுளது. அவ்வெழுச்சி வினைசெய்வதற்கண் ஆதலும், வறிதே போழ்து போக்கற்கண் சேர்தலும் என்றிருவகைத்து. முன்னதிற் சில்லோர்க்கு விழைவு பல்கும். பின்னதிற் பல்லோர்க்கு நுழைவு மல்கும். மல்கின், அவர்க்கு உள்ளம், உரை, உடல் என்னும் மூன்றும் தத்தந் தொழிலைச் செய்யாது, இயக்கமில்லாப் பொறிகளாய் முயற்சியின்றி நிற்கும். எண்ணம், சொல், செயல் எவற்றிலும் முயற்சியின்றி யிருத்தலே சோம்பல் எனப்படும்.

சோம்பலுக்கு, தன் அடிமைகளாகப் பலரையாக்கிக் கொள்ளும் வன்மையுண்டென்பர். அச்சோம்பல் மக்களின் ஆக்கத்திற்கு வேர்ப்புழுவாயும், அழிவுக்கு நச்சு நீராயும் இருத்தலால், அதுபோலத் தீயது வேறொன்றுமில்லையென்பது திண்ணம். நெருப்பைப்போலச் சுடுவது பிறிதொன்றின்மையால், நெருப்பை நெருப்பாகவே கொள்ளுமாறு போலச் சோம்பலைப் போலத் தீயது மற்றியாது மின்மையாற் சோம்பலைச் சோம்பலாகவே யுள்ளுவர் சான்றோர். சோம்பலானது தாமதகுணம் என்னும் தாய்க்குப் பிறந்த மறத்தல், துயிறல், போது நீட்டித்தல் ஆகிய பொல்லாப் பிள்ளைகள் எல்லோர்க்கும் மூத்த பிள்ளையாகும். அப்பிள்ளையோடு சேர்ந்து விளையாடத் தொடங்கினர் எத்தகையராயினும் அவரோடு மற்றைப் பிள்ளைகள் மூன்றும் வலிய வந்து மெலிய கூத்தாடும். தொடக்கத்தில் அவ்வாட்டு நனியின்பந் தோன்றுவதாயினும், இறுதியில் வீயாத துன்பம் விளைத்தே தீரும். அதனால் அவை வாழ்நாளின் எல்லைகாண நேர்ந்தார்க்கு நன்மை பயப்பது போலக் காட்டி, அவர் விரும்பி யேறிய பின்னர், அவர்தம்மை யுவரியிலாழ்த்தி வீழ்த்துங் கலத்தை நிகர்க்கும் என்று உணர்த்தும்,

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்'.

என்ற வள்ளுவர் வாய்மொழியை யொருவரும் மறத்தல் கூடாது.

சோம்பல், தன்னையுடையான் சிறந்த குடியிற் பிறந்து வளர்ந்து சீரும் பேரும் பெற்று, யாரும் புகழ வாழ்கின்றவ னெனினும், அவனது குடிச்சிறப்பை மாய்த்தும், புகழை மறைத்தும், பெயரைப் பிறர் நினைவுக்கும் வராதவாறழித்தும் விடும். அஃது ஒரு குடை நீழலிலிருந்து பொதுமையின்றி யுலகெலாம் ஆளும் அலகிலாப் பெருமையுடையானையும் தன்னை மேற்கொண்டானேல், கடிஞையைக் கையிலேந்திப் பிடி சோற்றுக்குப் படிமேலலையு மாண்டியாக்கி யொழியும். அது தன்னை நீங்காதவனை நண்பர் பலரும் இகழத்தக்கவாறு பண்ணுதலோடு, பகைஞர்க்கு அடிமையாகவும் புகுத்திவிடும். சோம்பல் நல்லெண்ணத்தைத் தோற்றலுஞ் செய்யாது. தோற்றினும் சொல்லவொட்டாது. இவ்விரண்டு மில்லையேற் செயல் எங்ஙன் உளது?

இவ்வுலக வாழ்க்கையில் அச்சோம்பலானது மக்களுக்கு யாதொரு நலனும் உண்டாகாதவாறு தடுத்து நிற்பதாகும். முதற்காரணமாகிய ஊக்கத்திற்கு மறுதலையாகி, அதனை மக்கள் உருவண்ணந் தடைசெய்கின்றமையாற் பொருளைப் பெற வழியொன்றுமில்லை. அப்பொருள்கொண்டு நிகழ்த்துங் கொடையில்லை. பின்னர் அக்கொடைபற்றிக் கொள்ளும் பெற்றியாய 'யாம் வள்ளன்மை யுடையேம்' என்று தம்மைத் தாம் மதித்து மகிழுஞ் செருக்குமில்லை, அச்செருக்காலாகும் இன்பமும் இல்லை.

அத்தகைய சோம்பல் இக்காலத்தில் எல்லாவிடங்களி லும் பெருகித் தோன்றுவதைக் கண்டும், அதைப்பற்றிய அறிஞர்தம் அறிவுரைகளைக் கேட்டும், அதனை நீக்கவேண்டிப் பலபட வரைந்தவற்றைப் படித்தும் அதன் துன்பத்திற் காளாகாதவர் சிலரேயாவர். வீடுகள், தெருக்கள், கடைகள், தொழிலகங்கள், கல்விக்கழகங்கள், நீதிமன்றங்கள் கோயில்க ளாகிய எவ்விடத்தும் அச்சோம்பல் விளையாடல் புரிகின்றது. கல்லையும் மண்ணையுமே அது பற்றிற்றில்லை. மற்றிரு திணை

463

யுள்ளும் ஆண், பெண், அறிவு, செயல் எல்லாவற்றையும் அது பற்றிக்கொண்டிருக்கிறதெனல் மிகையாகாது. தன்னாற் பற்றப்பெற்றவற்றுத் தன் வடிவத்தைத் தோன்றச்செய்யாது நிற்குஞ் சிறப்பொன்றினைத்தான் அச்சோம்ப லுடைத்தா யுளது.

சோம்பலுடையான் ஊக்கமில்லாத யானையைப்போல் உடல்வலிமையும், படைச்சிறப்பும் வாய்ந்தவனாலும், தன் மீது பகையுள்ளவனும் அவ்விரண்டுமில்லாப் புலியைப் போன்று ஊக்கமொன்றே யுடையவனுமான பிறனொருவனாற் கொல்லப்பெற்றொழிவான். உலகில் அச்சோம்பேறி மரத்திற்கும் இழிந்தவனாகின்றான். அவனுக்கும் மரத்திற்கும் நல்லறிவின்மை, வீணமுயற்சி யின்மை முதலியவற்றா லொப்புமையுண்டு. மக்கள் வடிவுதான் வேறுபாட்டை யுணர்த்துகின்றது. அதனால், அவனை மரத்திற்கும் இழிந்தவனாகக் கோடல் கூடாது எனலாம். அது சிறிது ஆராய்வார்க்குத் தவறெனத் தோன்றாதிராது. மரம் பயன்படுதல்போலச் சோம்பேறி எட்டுணையும் பயன்படவில்லை. படவேயியலாது. மரமோ பழம் முதலியன கொடுக்கின்றது. கோவில், வீடு, தேர், நாவாய்கட்கு உறுப்பாகின்றது. அதனால், அத்தன்மை யொன்றுமில்லாச் சோம்பேறியை மரத்திற்கும் இழிந்தவனாகக் கருதுவதே பொருந்துவதாகும்.

எஞ்ஞான்றும் வறிய வாழ்வாகிய கடலினின்றுங் கரை யேறவொட்டாது திகைப்பிப்பது சோம்பலுக்குரிய தொழிலாகும். இனி இதன் மறுதலையாய ஊக்கத்தை யறிவாம்.

ஊக்கமென்பது உள்ளத்தின் கிளர்ச்சியாகும். உள்ளமானது சோம்பலின்றித் தொழில்புரிதற்கண் எழுச்சிகொள்ளும். கொண்டு அதில் ஈடுபட நினையுங்கால் அத்தொழில் நன்றா? தீதா? என ஆராய்ந்து பின்னர் அவற்றில் தீங்கு தவிர்ந்து நன்குபுரிய விரும்பிச் செய்யக் கிளர்ச்சி கொள்ளலே ஊக்கமென்றனர் சான்றோர். ஊக்கம் என்னும் மொழி நன்மை, தீமை, இரண்டிற்கும் பொதுவே எனினும், இரு வகை வழக்கினுள்ளும் அது நலங்குறித்தே யல்லாது பொலங்

H64

குறித்துக் கொள்ளப்பட்டிலது. அத்தகைய சொற்கள் பல வுள. ஆக்கம், மணம், நெறி என்பன போல்வன வெல்லாம் அடையின்றியும் நன்மைக்காதல் அறிக.

அவ்வூக்கமாகிய தண்ணீரே சோம்பலாகிய நெருப்பை அவிக்கவல்லதாகும். இயற்கை நெருப்பை அவிக்க தண்ணீர்க்கு வேண்டுங் காலத்தினும் மிகச்சிறிதே சோம்பற்றீயை யவிக்கத்தக்க வூக்கப் புனலுக்குக் காலம் வேண்டும். அது தான் மக்களின் வளர்ச்சி என்னும் குழவிக்குத் தாய்ப்பாலாகவும் அவற்றிற்கு வரும் தளர்ச்சி என்னும் பிணிக்கு மருந்தாகவும் உளது. ஊக்கம் ஒன்றனாலேயே உயற்சியடைதல் கூடும். பொருள் தேடுவதும், அது தேடி அறம்புரிவதும், புரிந்து இன்பம் உறுவதும், அவ்வூக்கத்தினாற்றான் அமையும். ஊக்கம் செல்வத்தினுஞ் சிறந்தது. செல்வமே அழிதற்பாலது. எத்துணைக் காவலிட்டு ஓம்பி வரப்படினும் நீங்கியொழிவது. ஊக்கம் அன்னதகைத்தன்று. அது செல்வத்தைப்போல் உடம்பிற்குப் புறம்பான தன்மையா லெஞ்ஞான்றும் பொன்றாவண்ணம் எளிதிற் காக்கப்படுதற்குரியது.

ஊக்கத்தாலேயே கல்வியிற் சிறந்தனர் சிலர், கேள்வியிற் பெரியராயினர் சிலர். இயற்கைப் பொருளாராய்ச்சியில் வல்லுநராயினர் சிலர். ஒழுக்க முதலியவற்றிலே மிகுந்தனர் சிலர். ஊக்கத்தாலே தோட்டிகளுந் துரைகளாகிக் கேட்டினை யெல்லாம் அடியோடு ஓட்டி மேட்டிமையுற்று வாழ்கின்றனர். ஊக்கமே நல்ல நோக்கத்தையாக்கும். ஐம்பொறிகளைச் செந்நெறியிற் போக்கும். இறை வழிபாடு செய்தற்குரியதாக நெஞ்சினைத் தூயதாக்கும். இரு வினைகளையும் தீர்க்கும். அருள் வாழ்விற் சேர்க்கும். ஊக்கத்தாலாகாதது ஒன்றுமே யின்று. உயரிய வாழ்வு ஊக்கத்தினாற்றான் உண்டு. வறுமையால் வாடும் நிலைமை சோம்பலாலும், செல்வத்தாற் சிறக்குந் தலைமையூக்கத்தாலும் உண்டாதலை உணர்வோன் எவனும் முன்னதன் தீமையைத் தவிர்க்கவும், பின்னதன் நன்மையை யடையவும் முயலாமலிரானென்க.

ஊக்கமும் பொருளும் ஒருங்குடையவன், ஊக்க மொழி வதற்கன்றிப் பொருளொழிவதற்குச் சிறிதும் வருந்தவேமாட்டான், அத்தகையோனுக்கு ஊக்கம் ஒழிவது அரிது. ஆதலின் அவனை வருத்தம் வருத்த வழியில்லை. அவன் சென்ற பொருளைப் பொருளாகக் கருதாது, நின்ற வூக்கத்தை நிலையாய்ப்பற்றித் தனக்கு வேண்டுமனைத்தையும் நொடியிற் பெற்று மகிழ்வான். ஆதலின், அவனை அவ்வூக்கம் என்றும் காக்கும். அவன் தோன்றிய குடியை மேன்மேல் உயர்த்தும். அவன்பாலுள்ள குற்றத்தைப் போக்கும். யாவரும் அவனைப் புகழவைக்கும். பகைவரெல்லாரும் பணிந்துநின்று அவன தேவல் கேட்கப்பண்ணும். குறளன் நெடியோனாகி அளந்த உலகப் பரப்பெல்லாம் ஒருங்கே எய்துவிக்கும். இடுக்கண் முதலியவற்றால் தளராத ஊக்கமுடையவனிடத்தில் ஆக்கம் தானே வழிகேட்டு வருதல் இயல்பாயிருத்தல் அறிக. சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோன் என்னும் பெயரிய புலவர் வேந்தர், மரங்களிற் பூப்பெருகுதலுக்கு உள்ளம் மடிந்திருத்தலில்லாத ஊக்கமுடையோனது செல்வம் பெருகுதலை யுவமையாக் கூறியுள்ளது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

ஊக்கமுடையோன் கணைபலவற்றாற் புண்பட்ட ஞான்றும், அதனாற் சிறிதுந் தளர்வுறாது தன்பெருமையை நிலைநிறுத்தும் போர்க்களிறுபோலத் தான் எண்ணிய உயர்ச்சிக்குக் கேடுநேர்ந்தபோதும் அதனாற் றினைத்துணையும் வாட்டங் கொள்ளாது தன் பெருமையை நிலைநிறுத்துவான். அவன் ஒருபோதும் தான் தலைக்கொண்ட செயலைக் கடைப்பிடியில்லாத மடியர்பால் வையான். அவன் தாளாண்மையின்கண் வேளாண்மை என்னுஞ் செருக்குள்ளதென்பர் பெருநாவலர்.

அத்தகையோன் ஊக்கத்தை மேலும்மேலும் அடையத் தக்கவழி யொன்றுண்டு. அஃது, அவனுக்கு வரும் இடையூறுகள் பலகோடி எனினும், அவற்றை அணுத்துணையும் பொருட்படுத்தாதவாறகற்ற வல்லது. பொறைமிக்க பாண்டிலை யிழுக்கும் பகடு சேற்று நிலம் முதலியவற்றில் மருங்

கொற்று, மூக்கூன்றித் தான் தவழ்ந்து அரிதின் உய்க்கும். அதுபோல், ஊக்கமுடையோனும் தான்தொடங்கிய வினை செய்தற்கண் இடையே நேரும் இடுக்கண்களைப் பொருட்படுத் தாமல் வினை முடிவு ஒன்றனையே யுளத்திலெண்ணிக் குறையை நிறைவுறச்செய்ய முயல்வான். அவன் வினை முற்றியபின் உண்டாகும் இன்பத்தை இடையே துன்பம் வரும் போழ்தெல்லாங்கொண்டு, எடுத்த செயலிலேயே கருத் தைச் செலுத்தி வருவான். இடையே வருந்துன்பத்தை முடிவில் ஆகும் இன்பமாக மாற்றிக்கொள்ளுதலே ஊக் கத்தை மேலும் மேலும் வளர்க்குந் தகைத்தெனினும் அதனை அடைதல் எளிதன்று. 'இடுக்கண் வந்துற்றபோது எரிகின்ற விளக்குப்போல நடுக்கமொன்றுனுமின்றி நகு'தல் என்னும் பெறலரும் பான்மையுடையோர் சிலரேயாவர். அவரே இன் பத்துள் இன்பம் விழையாது துன்பத்துள் துன்பம் உறுத லிலராய், முனிவரெனத்தக்கவர்.

ஊக்கமும் சோம்பலும் முறையே அடியோடு கொள்ள வும் அடியோடு தள்ளவும்படா என்பது சிலர் கொள்கை. அவர் கூற்றும் அறியத்தக்கதே. அஃதாவது, கொலை, களவு, பொய், கள் முதலாயினவற்றை மேற்கொள்ளுமாறு உள்ளந் தூண்டினால் அங்குச் சோம்பலடைதலும், ஊக்கந்தவிர்தலும் வேண்டும் என்பதே. அவர் சொல்வன்மைக்கு மகிழ்ந்து அதனைக்கோடல் தவறாகாது. அவற்றில் ஊக்கம்கொண்டால் என்னாகும்? முதலிற் கூறியவாறு நன்மையிற் செலுத்தப் படும் உள்ளக்கிளர்ச்சியன்றோ ஊக்கமெனப்படும். ஆதலின் தீயனபுரியாமை, நல்லன செய்தல் என்னுமிரண்டனுள்ளும் ஒரு சிறிதுஞ் சோம்பலைக் காண்டலின்றி இம்மை மறுமைப் பயன்களை யெஞ்சாதுபயக்கும் ஊக்கத்தைக் கடைப் பிடித்து 'உலகறியப் பான்முளை தின்று' மறலியுயிர்குடித்த கான்முளை போன்று நினைத்தவற்றை நிறைவேற்றி நிலம் அனைத்தும் பெறுதலே அறிவுடைய மக்கள் கடனும்.

—தமிழணங்கு மலர், இதழ் 4.

———

467

அர்ச்சனைகள்

பிர்மஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள்
தலைமைப் பேராசிரியர், சிவாகமபாடசாலை, தருமபுரம்.

(1) பஞ்சமுகார்ச்சனை:

சிவபெருமானின் ஈசானம் தத்புருஷம் அகோரம் வாமதேவம் ஸத்யோஜாதம் என்கிற ஐந்து திருமுகங்களையும் தனித்தனியே அவ்வத்திசைகளில் தியானித்துச் செய்யும் அர்ச்சனை பஞ்சமுகார்ச்சனை எனப் பெயர்பெறும்.

முறை: வில்வம், விளா, நொச்சி, கிளுவை, மாவிலிங்கை என்ற பஞ்சவில்வத்தினால் ஒரே சமயத்தில் ஐந்து ஆசாரியர்கள் கர்ப்பகிருஹத்தில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, ஈசானம் என்ற திசைகளில் நின்றுகொண்டு, ஐந்து அறிஞர்களால் படிக்கப்படும் சிவஸஹஸ்ரநாமத்தை மனனம் செய்துகொண்டு அர்ச்சிக்கவேண்டும். அவ்வாறு அர்ச்சனை முடிந்தவுடன், தேங்காய்ச்சாதம், சர்க்கரைப்பொங்கல், எள்ளன்னம், தயிரன்னம், வெண்பொங்கல் என்ற அன்னங்களை, ஈசானம் முதலிய திக்குகளில் வைத்து நிவேதனம் செய்து பாயசம் வடை தேங்காய் பழம் தாம்பூலம் இவைகளையும் நிவேதித்து, கர்ப்பூரஹாரத்திசெய்து பிரசாதம் வழங்குதல் வேண்டும்.

பயன்: இது ஸத்யோஜாதம் முதலிய திருமுகங்களைக் காரணமாகக்கொண்டு பிரமன் முதலியவர்கள் செய்யும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற ஐந்து தொழிலுக்கும் உஜ்ஜீவன சக்தி அளித்து, சாந்தியதீதாதி கலைகளில் இருக்கும் 224 புவனங்களில் வசிக்கும் தனித்தனி 84 லக்ஷம் ஜீவராசிகளுக்கும் தனுகரண புவன போகத்தை யளித்து, அவைகள் மோக்ஷத்தையும் அடைய ஏதுவாக இருப்பதாம். இது,

"ये चाऽथ शुद्धभुवनोद्भव भोगकामाः त्वामर्चयन्ति विविधैर्यजन प्रकारैः । तेभ्यः प्रदाय परमेश्वर साधकेभ्यो भोगान्ददासि तदनंतरमेव मोक्षम् ॥

என்ற அகோரசிவாசாரியர் வாக்கியத்தால் அறியப்படுகிறது.

2. சண்முகார்ச்சனை;

இறைவனின் பாதாளமுகமான ஆருவது திருமுகத்துடன் ஆறுமுகமாக விளங்கும் முருகப்பெருமானுக்கு மேற்கூறியவாறு, ஆறுபேர்களைக்கொண்டு சமகாலத்தில் செய்யப்படும் ஆறு ஸஹஸ்ரநாம அர்ச்சனை ஷண்முகார்ச்சனை எனப் பெயர்பெறும், ஆருவதாகப் பாலன்னத்துடன் தேனும் தினைமாவும் நிவேதனம் செய்யவேண்டும். இவ்வாறு அர்ச்சனை செய்கிறவர்கள் புத்ரசந்தானம், விஜயம், ரக்ஷை, ஆயுஸ், காந்தி, கீர்த்தி என்ற ஆறினையும் அடைவார்கள்.

सन्तानं विजयं वीर्यं रक्षामायुः श्रियं यशः ।
प्रदद्यात्साधकस्याऽशु सुब्रह्मण्यः सुमार्चितः ॥

என சாரதாதிலகம் கூறுகிறது.

3. நவசக்தி அர்ச்சனை:

தேவியின் பீட சக்திகளான வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதநீ, சர்வ பூததமநீ என்ற எட்டு சக்திகளுடன் கூடிய மனோன்மணியால் ஸமகாலத்தில் செய்யப்பெறுகின்ற ஒன்பது சஹஸ்ரநாமார்ச்சனைக்கு நவசக்தி அர்ச்சனை எனப்பெயர்.

தனித்தனி பன்னீரைத் தெளித்து வாசனையுள்ள எட்டு வகையான, புஷ்பங்கள் சுத்தமாகத் தயார்செய்யப்பட்ட மஞ்சள்குங்குமம் ஆகிய இவைகளைக்கொண்டு பரிசுத்தரான ஒன்பது ஆசாரியர்கள் தேவி கர்ப்பக் கிருஹத்தில் தேவியைச் சுற்றி நின்றுகொண்டு தேவியின் நாமானுஸ்மரணத்துடன்

அர்ச்சிக்கவேண்டும். ஒன்பது அறிஞர்களால் லலிதாஸஹஸ்ர நாமத்தை ஒரே சுருதியில் தேவி தியான புரஸ்ஸரமாகப் படிக்கச்செய்யவேண்டும். முடிவில் பக்குவமாயும் ருசியாயு முள்ள ஒன்பதுவகை நிவேதனத்துடன் பாயசம், வடை, தேங்காய், மலைப்பழம் முதலிய ருசியான பழங்களையும் நிவேதிக்கவேண்டும். ஏலக்காய், லவங்கம், குங்குமப்பூ, பச்சக்கற்பூரம், ஜாதிக்காய் சேர்த்துக்கட்டின காளாஞ்சி முதலியவைகளையும் நிவேதனம்செய்து கற்பூர ஹாரத்தி செய்து பிரசாதம் வழங்கவேண்டும்.

पायसं भाग्यवृद्धिःस्यात् माषापूपं धनप्रदम् ।
नारिकेलं जयं प्रोक्तं फलं चा भीष्टसिद्धिदम् ॥
तांबूलं श्रीकरंप्रोक्तं कर्पूरज्योतिदर्शनम् ।
ज्योतिर्मयस्वरूपाढ्य पुत्रपौत्रविवर्धनम् ॥

"பாயசத்தினுல் பாக்கியவிருத்தியும், வடையினுல் தனவிருத்தியும், தேங்காயினுல் ஜயமும், பழத்தினுல் இஷ்டசித்தியும், தாம்பூலத்தினுல் சோபையும், கர்ப்பூர தரிசனத்தினுல் தேஜோவான்களான புத்திர பௌத்திராபிவிருத்தியும் உண்டாகும்"

பயன்: ஹயக்ரீவர்,

यस्तु नामसहस्रेण शुक्रवारे समर्चयेत् ।
सर्वान्कामानवाप्येह सर्वसौभाग्यसंयुतः ॥
पुत्रपौत्रादि संयुक्तो भुक्त्वा भोगान्यथेप्सितान् ।
अन्ते श्रीललितादेव्याः सायुज्यमतिदुर्लभम् ॥

"எவர் (இவ்வாறு) சுக்கிரவாரத்தில் சஹஸ்ரநாமத்தினுல், மஹாதேவியை அர்ச்சிக்கின்ருரோ, அவர் எல்லா விருப்பத்தையும் அடைகின்ருர். ஸகல சௌபாக்யத்தையும் அடைகின்ருர். புத்ரபௌத்ராதிகளுடன் விரும்பிய போகங்களை அனுபவித்து முடிவில் சாயுஜ்யத்தையும் அடைகிருர்".

H70.

கிராமப் பிரசாரப் பிரிவு :

மாயூரம் தாலூகா கிராமங்களில்

தருமபுர ஆதீனப் பிரசாரம்

மாதந்தோறும் நடைபெற்றுவரும் வழக்கம்போல் இம் மாதத்திலும் கீழ்க்காணுமாறு பல கிராமங்களில் பிரசாரம் நடைபெற்றது. மக்கள் உற்சாகத்தோடு கலந்துகொள்கின்றூர்கள். சில இடங்களில் வார வழிபாடும் தொடங்கப் பெற்றிருக்கிறது.

17—7—53 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் தரங்கம் பாடி ஆரியநாட்டுச் செட்டித்தெருவில் பிரசாரத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கடலோரத்தில் வாழ்கின்ற பரதவர்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். ஒலிபெருக்கி கியாஸ் லைட் சகிதமாகப் பிரசாரகர்கள் சமயப் பிரசார உந்தூர்தியில் வந்துசேர்ந்தனர். தரங்கம்பாடி போதனுமுறைப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி உதவித் தலைமையாசிரியர் உயர்திரு ரங்கசாமி அய்யர் B. A., L. T., அவர்களும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் உயர்திரு வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்களும், ஆதீனக் கல்லூரித் தமிழ் வகுப்பு மாணவர் நாராயணசாமியும் கடவுட் கொள்கையை வற்புறுத்திப் பேசினுர்கள். காலையில் எழுந்ததும் கடவுளைச் சிறிதுநேரமாவது பிரார்த்தித்துத் தங்கள் வேலைகளில் ஈடுபடுமாறு கூறப்பட்டது.

18—7—53 சனிக்கிழமை தரங்கம்பாடி ஸ்ரீ மாசிலாமணி ஈசர் கோயிலில் கூட்டம் நடைபெற்றது. முன்னறிவிப்புக்கள் செய்யப்பட்டிருந்ததால் தக்கார்பலர்வந்திருந்தனர். பொறையார் பஞ்சாயத்து போர்டு மெம்பர் உயர்திரு செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். சிதம்பரம் திரு. நயணியப்ப பிள்ளை அவர்களும், திரு. A. C. நாயுடு அவர்களும் கடவுட்கொள்கையை வலியுறுத்திப்பேசினர். கூட்டுப்பிரார்த்தனையுடன் வாரவழிபாடு செய்யுமாறு கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது. பிரசாரக் குழுவின் சார்பில் வி. சா. குருசாமி அனைவர்க்கும் நன்றியுரை கூறினுர்.

19—7—53 ஞாயிற்றுக்கிழமை பொறையாறு சிவன்கோயி லில் பிரசாரத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாக அச்சிட்டு வழங்கப்பட்டன. ஒலி பெருக்கிமூலம் அடிக்கடி பிரசாரம் நடைபெறுவது அறிவிக்கப் பட்டது. இரவு 7 மணி அளவில் மக்கள் திரளாகக் கூடினர். கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'குழந்தையுள்ளம்' என்பதுபற்றிப் பேசினார்கள். சிதம்பரம் திரு. நயனியப்ப பிள்ளை அவர்கள் கடவுள் திருவுரு வங்கள் என்பதுபற்றிப் பேசினார். பின்னர் சக்திவிலாஸ் பஸ் சர்வீஸ் புரொப்ரைட்டர், திரு. G. வீரப்பபிள்ளை அவர்கள் தம் அனுபவ உரையைக்கூறி, கேட்போரைப் பக்தியில் ஈடுபடச் செய்தார்கள். பின் அவர்கள் தலைமையில் அக்கோயிலில் நிரந்தர வாரவழிபாடு தொடங்கப்பெற்றது. தக்கார் பலரும் வார வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருவங்கமாலை பதிகம் பாடிக்கொண்டு கோயிலை வலம்வந்து தரிசித்தனர்.

31-7-53 வெள்ளிக்கிழமை திருக்கடவூரில் விசேஷம். ஆலயவழிபாடு ஆற்றிக்கொண்ட பின்னர் ஸ்ரீ அமுதகடேசர் சந்நிதியில் பிரசாரப் பேச்சுக்கள் தொடங்கின. முதலாவதாக ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்ட பாணி தேசிகர் அவர்கள் அபிராமி அந்தாதியைப்பற்றிய சில சுவைமிக்க வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி விரிவுரை யாற்றினார்கள். "மந்திரங்கள் நினைப்பாரைக் காப்பனவே யன்றிச் சொல்லுவாரை – வீணே பேசித்திரிவாரை – தூற்று வாரைக் காப்பன அல்ல" என்று அவர்கள் குறிப்பிட்டது அறிஞர்க்குப் பெருவிருந்தாக அமைந்தது. அடுத்து, ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் அம்மையார்களைப்பற்றிய சேக்கிழாரின் சிந்தனை உரைகளைச் சிந்திக்க வைத்தார்கள்; புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் வரலாறு கள் அவர்களது பேச்சிலே ஆனந்த நடம்புரிந்து, தேனாய் இன்னமுதாய்த் தித்தித்தன. அடுத்தபடியாக ஆதீன ஒரியண் டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. சொ. சிங்கார வேலன் 'விளக்குத்தூபம்' என்ற தலைப்பில், குங்குலியக் கலயனார் அன்பின் திறத்தைக் குறித்துக் காட்டினார்.

472

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும் அடியார்கூட்டங்களுடனும் அன்பர்களுடனும் எழுந்தருளியாகி வழிபாடு செய்தருளினார்கள். அம்மையார் சந்தனக்காப்பு அலங்கார வழிபாடு நவமுகார்ச்சனை அனைவர்க்கும் ஆனந்தம் அளித்தது.

1—8—53 சனிக்கிழமை காட்டுச்சேரியில் :- மாலை 4 மணிக்கெல்லாம் கடலூரைவிட்டுப் புறப்பட்ட பிரசார வாகனம் காட்டுச்சேரியை 6½ மணிக்கு அடைந்தது. திரௌபதியம்மன் கோயில் திருவாயிலில் கூட்டம் நடைபெற்றது. ஊர்ச் சிறுவர்களும், பெரியவர்களும் அமைதியுடன் பேச்சுக்களைக் கேட்டுப் பெரும்பயனடைந்தனர்; உள்ளூர் ஜவஹர் வாலிபர் சங்கத்தின் செயலாளரான மாணவர் முத்தையன் ஆதீனப் பிரசாரக் கோஷ்டியை, ஊரார் சார்பிலும், கழகச்சார்பிலும் வரவேற்று அன்போடு வரவேற்புரை மொழிந்தார். ஆதீனத் திருக்கடவூர் தேவஸ்தான ஓதுவா மூர்த்திகள் திருமுறை ஓதி முடிந்ததும், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் 'இளைஞர்களுக்கு' என்ற தலைப்பில் பேசினார். 'கடவுட்கொள்கை கருத்தில் மலர வேண்டும்; உள்ளத்தில் பொய்ப்புதர் மண்டக்கூடாது; களவுப் பாம்பு திரியக்கூடாது; பொறாமைப்பேய் திரிந்து அலைந்து கெடுக்கக்கூடாது' என்று குறிப்பிட்ட அவர் இளைஞர்கள் அன்னம்போல் வாழவேண்டும் என்று முடித்தார். பின்னே பேசிய புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் உடல்சுத்தம், உள்ளச்சுத்தம் சிறுவர்களுக்கு வேண்டுமெனவும் சுத்தம் சுகந்தருமெனவும் பேசினார்கள். ஓதுவாமூர்த்திகள் பண்ணிசையுடன் கூட்டம் இனிது முடிந்தது. தரங்கை போதனாமுறைப் பெண்கள் பள்ளியைச்சேர்ந்த ஸ்ரீ ரங்கசாமி ஐயர் B. A., L. T., அவர்களும் வந்திருந்து கூட்டத்தை இனிது சிறப்பித்தமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். கூட்டத்தை முடித்துக்கொண்டு பிரசார வாகனம் இரவு திருக்கடவூர் வந்து சேர்ந்தது.

2—8—53 ஞாயிற்றுக்கிழமை ஒழுமங்கலத்தில் ;- அன்று பதினெட்டாம் பெருக்கு; செந்தமிழ்நாட்டு மங்கையர்க்கும் ஆடவர்க்கும் மனக்களிப்புதரும் நாள். காவிரியன்னை தன் செல்வப் புதல்வர்களால் சீராட்டப்பெறும் நாள். தன் தடக்கைகளால் தளர்ச்சிநீங்கி வாழும் தன் தமிழ்க்குழந்தைகள் தன்னைப் பணிந்து போற்றிசெய்யப், புதுநுரை பூத்துப் பொங்கி ஓடும்

புனிதநாள். இந்நன்னாளிலே பிரசாரம் காவிரி அன்னையை ஒத்துக் கன்னித் தமிழ்நாட்டாரைப் பாதுகாத்து வருகின்ற பராசக்தியின் திருக்கோயிலாகிய ஒழுமங்கலத்தில் ஒழுங்குற நடந்தது எனக் கூறிக்கொள்வதில் வியப்பிருக்கின்றதல்லவா?

மாலை 7 மணிக்கெல்லாம் ஒழுமங்கலம் வந்துசேர்ந்த பிரசார கோஷ்டியினரை. கோயில் நிர்வாக அதிகாரி திரு சுப்பிர மணியப் பிள்ளை அவர்களும், கோயில் டிரஸ்டி கோதண்டராம நாயுடுகாரு அவர்களும், சிவ அன்பர் கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களும் இனிய முகத்துடன் வரவேற்று வழிபாடு நடத்து வித்தனர்; கூட்டத்துக்கும் வந்து சிறப்பித்தனர். திரு. கோவிந்தசாமிப் பிள்ளை தலைமை தாங்கினர். பின் வித்துவான் சொ. சிங்காரவேலன் சிறுவர்களுக்கு ஏற்ற முறையில், அன்பு வழிபாடு வேண்டும் என்று வற்புறுத்திப் பிரசங்கம் செய்தார். அடுத்து, புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியா ரவர்கள், மனம் வாக்கு, காயம் என்பவைகளை இனிது விளக்கி ஞர்கள்; நமப்பார்வதி பதயே என்று கூறி அவ்விளைஞர்கள் கூட்டத்திடையே சிவநாம முழக்கத்தை அண்டம் அளாவச் செய்தார்கள். பின்னே சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சிறிய வரும் பெரியவரும் உணரும் வகையில், படித்தவரும் பாமரரும் பாராட்டும் வகையில் விரிவுரை நிகழ்த்திஞர்கள். அன்னை வழிபாட்டுடன் கூட்டம் முடிந்தது. வழக்கம்போல் தரங்கை ஸ்ரீ ரங்கசாமி ஐயரவர்கள் அன்றும் வந்திருந்து சிறப்பித்ததும். ஆலய நிர்வாக அதிகாரி பிரசார கோஷ்டியினரை வரவேற்று உபசரித்ததும் பாராட்டக்கூடிய செய்தியாகும்.

3—8—53 திங்கட்கிழமை பொறையார் சிவன்கோயிலில்:- தருமபுர ஆதின ஆதரவில் தொடங்கிவைக்கப்பெற்ற வார வழிபாட்டின் மூன்ருவது வார வழிபாடு அன்றைக்கு. இரவு 8 மணிக்கெல்லாம் உள்ளூர் சிவநேசச் செல்வர்கள் சிவநாம முழக்கத்தோடும் கூடியிருந்தார்கள். ஆதீனப் பிரசாரக் குழு வினர்களும் கலந்துகொண்டனர். அன்பர்களெல்லாம் சிவ நாமாவளியைப் பாராயணம் செய்துகொண்டு ஆலயவலம் வந்தார்கள். திருவாசகம், திருவட்பா, தேவாரப்பாக்கள் பண் ணிசையுடன் உள்ளமுருகப் பாடப்பெற்றன. பின்னர் ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "செந்தமிழ் முருகன்" என்ற தலைப்பில் சிறந்ததோர்

474

சொற்பொழிவாற்றினர்கள். "விஞ்ஞான உலகத்தையும், புராண உலகத்தையும் இளைஞர் உலகத்துக்கு எடுத்துக்காட்டுவதே அறிஞருலகின் கடமையாகும்" என்று குறிப்பிட்ட அவர்கள், பின்னே 'முருகன்' எப்படிப் பிறந்தான் என்று ஸ்காந்தம், கந்தபுராணம் கூறுகின்றன என்று ஆராய்ந்தார்கள். அடுத்து ஆண்டவனுக்குரிய ஓடிப்பாயும் சக்தி, தடுத்து நிறுத்தும் சக்தி என்ற இரண்டையும் மின் விளக்கோடு ஒப்பிட்டு முடித்துக்கொண்டார்கள். பிறகு வித்துவான், சொ. சிங்காரவேலன், 'இதுபோன்ற வாரவழிபாடுகள் செந்தமிழ் நாடு முழுதும் செழிக்கவேண்டும்' என்றும், அதுவே சைவ உலகம் அணி பெற வழியாம்' என்றும் குறிப்பிட்டார்; பின்னர் மூன்று நிமிஷ நேரம் மௌனப் பிரார்த்தனையுடன் கூட்டம் இனிது முடிந்தது. ஸ்ரீமான் அரங்கசாமி ஐயர் B. A., L. T., அவர்கள் முழு முயற்சியால் இவ்வழிபாடு நடக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

4—8—53 செவ்வாய்க்கிழமை ஆக்கூர் சிவன்கோயிலில் வழிபாடு நடந்தது; ஆதீனக் குத்தகையாளர் திரு. சாமிநாத பிள்ளை அவர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவாகவும், விமரிசையாகவும் செய்து முடித்திருந்தார்கள். திருக்கடவூர் ஓதுவாமூர்த்திகள் திருத்தொண்டத்தொகையை முன்னே கூற, பின்னே ஊர்ப்பிரமுகரும், பிரசாரக் குழுவினரும் கூறச் சிவநாம முழக்கம் அண்டமளாவியது. கோயில் டிரஸ்டி திரு. இராமலிங்க முதலியார் தலைமை வகித்தார்; திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை, மற்றும் ஊரிலுள்ள அறிஞர்கள், புலவர்கள் அனைவரும் வந்திருந்தனர். முதலில் பேசிய புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'கருவாய்க்கிடந்து' என்ற தேவாரத் திருப்பாடலுக்குப் பொருள் விளக்கம் செய்து பேருரை யாற்றினர்கள். அடுத்துப் பேசிய வித்துவான், சொ. சிங்காரவேலன் 'ஏன்' என்ற தலைப்பில், இலர் பலராகிய காரணத்தையும், அறம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார். பின்னே பேசிய செம்பனார்கோவில் திரு. நாகரெத்தினம் அருமையும் எளிமையும் என்ற அழகிய தலைப்பில் அருமையான கருத்துக்களை வழங்கினர்கள். தலைவர் முடிவுரை கூறுங்கால், 'ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பணித்தபடியே ஓர் வாரவழிபாட்டுக்குழு விரைவில் அமைத்து ஆவன

செய்கின்றோம்' என்று இனிய எளிய முறையில் பேசி முடித்தார்கள். மாலையில் பெருமானுக்கு அர்ச்சனை செய்யப்பெற்றது. இரவு பிரசாதம் அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. ஆதீனத்து அன்பர் சாமிநாதப் பிள்ளையின் ஏற்பாடுகள் பெரிதும் பாராட்டத்தக்கன.

5—8—53 புதன்கிழமை செம்பொன்னார்கோவில் சிவன் கோயிலில்.- மாலை 7½ மணிக்குக் கூட்டம் தொடங்கியது. அவ்வூர் தமிழாசிரியர் வித்துவான் திரு. A. சுப்ரமணியம் கடவுள் வணக்கம் பாடினர்; பின்னர் 'இந்துமத பரிபாலனம்' பத்திரிகாசிரியர் ஸ்ரீ N. S. கோவிந்தசாமி தலைமை வகித்துப் பேசினர். அடுத்து வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் 'சிந்தனை' என்ற தலைப்பிலும், திரு. நாகரத்தினம் 'அருமையும் எளிமையும்' என்ற தலைப்பிலும், வித்துவான்; திரு. அ. சுப்பிரமணியம் 'இனியன்' என்ற தலைப்பிலும், திரு. ம. சிவசம்பு 'கடவுள் உணர்ச்சி என்றதலைப்பிலும் வித்துவான் ஸ்ரீ முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் திருக்குறளிற் சைவசித்தாந்தக் கொள்கைகள் என்ற தலைப்பிலும் பேசினர்கள்; தலைவர் முடிவுரைக்குப்பின் ஆலய நிர்வாக அதிகாரி திரு N. S. தங்கவேலுப் பிள்ளை யாவருக்கும் நன்றிகூறினர். பிரசாரக் குழுவினர் சார்பில் ஸ்ரீ சொ. சிங்காரவேலன் யாவருக்கும் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்; கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

6—8—53 வியாழக்கிழமை விளநகர் சிவன்கோயிலில்: மாலை 7½ மணிக்கு ஆலய வழிபாட்டுடன் கூட்டம் தொடங்கியது. பின் பிரசாரக் குழுவினர் இவ்வூர் வரதராசப்பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தனர். பிறகு நடந்த கூட்டத்தில் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், சொ. சிங்காரவேலன் அவர்களும், கல்லூரி மாணவர் திரு. ம. சிவசம்பு அவர்களும், சைவத்தின் முக்கிய நோக்கங்களைப்பற்றி விஸ்தாரமாகப் பிரசங்கித்தார்கள்; கூட்டத்தில் பெரும்பாலோர் கிராமத்துத் தொழிலாளப் பெருமக்களும் வியவசாயிகளுமே என்பது குறிப்பிடத்தக்கது. ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள் பண்ணிசைத்தனர்; ஒருவாறு கூட்டம் இனிது முடிந்தது.

476

திருச்சி - இராமநாதபுரம் ஜில்லாவில் தருமபுர ஆதீன சமயத்தொண்டு

[வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.]

தருமபுர ஆதீனம், தோன்றிய காலந்தொடங்கி இன்று வரை தன்கடமையை உணர்ந்து காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு தொண்டாற்றி வருவதைத் தமிழக மக்கள் நன்கு அறிவர். கடவுள் உணர்ச்சி மக்கள் உள்ளத்தில் இடம் பெருமையால் நாட்டில் கொலை, களவு, பஞ்சம் முதலியன சில ஆண்டுகளாக அதிகரிக்கத் தொடங்கின. அவற்றை அகற்ற ஆண்டவன் அருள்வழியே தலையாயதெனத் திருவுளங்கொண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், ஐந்து ஆண்டுகளாக அறிஞர் களும், அடியவர்களும் நிறைந்த பிரசாரக்குழு ஒன்றமைத்து உந்தூர்திமூலம் ஊர் ஊராகவும், மாவட்டம் மாவட்டமாகவும் சென்று பணிபுரிந்துவர ஆவனசெய்து வருகின்றார்கள்.

திருச்சி, இராமநாதபுர மாவட்டங்களில் ஒருமாதம் சமயப் பணிபுரிய வேண்டுமென ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திரு வுளங்கொண்டவண்ணம் திட்டமிடப்பெற்றது. அத்திட்டத் தில் அடியவனும் இடம் பெற்றேன். 16–7–53 குருவாரத்தன்று காலை 7-மணிக்குக் குருவருள் பெற்றுத் திருவருள் நெறிபரப்ப பிரசாரக் குழுவினரைக்கொண்ட உந்தூர்தி திருச்சி நோக் கிப் புறப்பட்டது. மாலை 4-மணியளவில் மலைக்கோட்டை மௌனமடம் வந்து சேர்ந்தது. சொன்மாரி பொழியுந் தொண் டர்களை நீர்மாரி பொழியும் வானம் வரவேற்புச் செய்தது. குறிப்பிட்டபடி ஆறு மணிக்கு ''சைவசித்தாந்த சபை''யில் சபை அமைச்சர் திரு. நாகரத்தினம் பிள்ளை முதலிய பல அன் பர்கள் வரவேற்கக் கூட்டம் தொடங்கியது. பல மக்களும் அறவுரை கேட்டு அகமகிழ்ந்தனர்.

17—7—53 காலையிலேயே திருச்சியில் ஒரு எழுச்சி பரவி யது. ஸ்ரீ தாயுமானசுவாமிக்கு மகாருத்திரா பிஷேகத்திற்குக் காவிரிநீர் யானைமீது கொண்டுவரப் பெற்றது. வேதபாராய ணம் திருமுறைப் பாராயணம் முழங்கியது. மாலை நான்கு மணிமுதல் அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இரவு ஏழு

மணிக்கு மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் ஆயிரக் கணக்கான மக்களிடையே சமய விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. முதல்நாள் வரவேற்பளித்த வானம் கருணைமழை பொழிந்தது. மக்கள், தாயான செல்வன் குளிர்ந்த உள்ளம் உடையான் ஆதலின் நம்மையும் குளிரச்செய்கிறான் என வாயார வாழ்த்தினர். குன்றுடையான் திறங்கூறும் குழுவினர் வந்தனர் அனைத்துயிர்களும் மழைவளம் பெற்றன என ஒரு சிலர் கூறினர்.

மறுநாள் 18—7—53 அன்று உய்யக்கொண்டான் திருமலை கிராமத்தில் அருள்நெறித் திருக்கூட்டச் சார்பில் இரவு 8-மணிக்குப் பிரசாரம் தொடங்கப் பெற்றது. திருப்பெருந்திரு குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். தொண்டர்கள் தமிழிலக்கியங்களில் கண்ட உண்மைகளை உளங்குளிர உரைத்தார்கள். அன்றும் வானம் வரையாது மழைவளம் தந்தது.

திருவானைக்கா, பல்லாற்றானும் பழம் பெருமை வாய்ந்த திருத்தலம். அவ்வூர் அகிலாண்டேஸ்வரி சந்நிதியில் 19—7—53 இரவு ஏழுமணிக்கு, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. அகிலாண்டம் பிள்ளையுள்ளிட்ட பெருமக்கள் சிலரும், பொதுமக்கள் பலரும் கூட்டத்தை அணிபெறச் செய்தனர். பிரசாரக் குழுவினர், அன்பின் திறத்தை—உறுதியைப்பற்றி நாயன்மார்களைக்கொண்டு எடுத்துக்காட்டினர். அனைவரும் அறிவுவளம் பெற அன்புநலம் பெருகவேண்டுமென்பதை மனமார வரவேற்றனர்.

நான்கு நாட்களாகத் திருச்சியை இருப்பிடமாகக் கொண்டு அறப்பணி யாற்றினோம். நிகழ்ச்சிக் குறிப்பின் வண்ணம் 20—7—53 மாலை நான்கு மணியளவில் கீரனூர் சென்றோம். அவ்வூர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தாலூகாவாகும், அவ்வூர் வழக்கறிஞர் சிலரும், அரசியல் அலுவலக அறிஞர்கள் பலரும் கூட்டம் கூட்டுவதற்கு ஒத்துழைத்தனர். சிவன்கோயில் மண்டபத்தில் இரவு 7-மணிக்குத் திரளாக மக்கள் குழுமி இருந்தனர். நாங்கள் பழங்காலத் தமிழகம் வளமுடையதாக—இன்பம் உடையதாக இருந்ததற்கும், இன்றைய தமிழகம் வளங்குறைந்ததாகத் துன்பம் நிறைந்ததாக இருப்பதற்கும்

காரணம் கடவுள் உணர்ச்சி குறைந்திருப்பதுதான் என்பதைச் சங்க இலக்கியம், வாழ்க்கை நிலையில் காணும் ஒருசில அனுபவம் முதலிய சான்று காட்டி விளக்கினேம், மழை வளம் பெருகி மக்களை மகிழ்வித்தது. உண்மை உணர்ந்த மக்கள் மற்றெருமுறையும் பிரசாரம் இவ்வூரில் நடைபெற வேண்டும் என விழைந்தனர். ஆண்டவன் அடியவர்கட்கு அவனன்றி அடைக்கலம் கொடுத்தல் யாண்டுமில்லை என்பதை விளக்குவதுபோல் கோயிலிலேயே குடியிருந்தோம். அவ்வாலயத்திலும் சுற்றுப்புறங்களிலும் சந்தனக்கட்டைக்குப் பதிலாகத் துரிஞ்சிக்கட்டைபோன்ற ஒருவகைக் கட்டையைப் பயன்படுத்துவதைக் கண்டும் கேட்டும் வியப்படைந்தோம், வீட்டை நமக்களித்துக் காட்டினைக் கொண்டான் கறைக் கண்டன்; பொன்னணிகளை நமக்களித்து என்பணிகளை ஏற்ருன் எண்டோளீசன்; துகிலை நமக்களித்துத் தோலையுடுத்தான் தொண்டர்கள் தோழன் என்பதைச் சொல்லால் அறிந்தோம்; நூல்களில் படித்து மகிழ்ந்தோம்; ஆனல் இன்று கண்கூடாகக் கண்டோம் மணமில்லாக்கட்டை தருஞ்சாந்தைத் தானேற்று மணமுள்ள சந்தனச் சாந்தை மக்கட்கீந்து மகிழும் மாண்புடைப் பெருமானின் செயலை. இக்கோயில், முன்னுளில் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச்சேர்ந்த கோயில்களில் ஒன்று.

21—7—53 காலை பூசனை முடித்தோம், வழக்கறிஞர் ஒருவர் துணைகொண்டு புதுக்கோட்டை சேர்ந்தோம். திருக்கோகரணம் சிவாலயத்தில் அடுத்தநாள் பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்தோம். வடக்குராஜவீதி வழக்கறிஞர் திரு. D. சிநிவாச ஐயர், B. A., B. L., அவர்களைக்கண்டு அன்றைய கூட்டத்திற்கு ஆவன செய்யுமாறு அறிவித்தோம். அகமிகமகிழ்ந்த வழக்கறிஞர் அனைவரையும் வரவேற்றுத் தமது மேல்மாளிகையில் எங்கட்கு இடமும் உதவி வேண்டிய வசதிகளும் செய்து தாயன்புடன் உபசரித்தனர். அன்று மாலை மாதர்கள் தெய்வநெறிக் கழகத்தில் கூட்டந்தொடர்ந்தது. குழுவினர், முற்கால மாதர்களின் மாண்பையும் அவர்கள்மாண்புறுவதற்குரிய இறையுணர்ச்சியையும் ஆதாரங்காட்டி அறிவுறித்தினர். கருணையுள்ளம்படைத்த தாய்மார்களும் தந்தைமார்களும் இத்தகைய சமயப்பணி நாட்டில் பரவவேண்டும் என இறைவனிடம் பிரார்த்தனை செய்தனர்.

இரவு எட்டு மணிக்குக் குலபதி பாலையா உயர்நிலைப்பள்ளியில் எங்கள் பணி தொடங்கியது. வழக்கறிஞர், திரு. D. சீநிவாச ஐயரவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். பின்னர் அன்பும் அருளும் ஒன்றே அதுபோல் சிவமும் சத்தியும் ஒன்றே என நூலாதரவுகாட்டியும், அம்மைஅப்பரும், அன்பும் அருளும் உடலமைப்பில் அமைந்த ஒற்றுமைகளை எடுத்துக்காட்டி அறிவித்தோம். வான்மழை வழாது பெய்தது. மறுநாள் மாலை ஐந்து மணிக்குக் கோகரணேச்சுரர் ஆலய முன்மண்டபத்தில் ஆடவர்களும் பெண்டிர்களும் நிறைந்து அணிசெய்தனர், அன்று பிரதோஷ காலமாகையால் தெரிசனம் காணவந்த மக்களும் வந்துசேர்ந்தனர். நாங்கள் பிரதோஷ காலத்தைப் பற்றிய உண்மைகளையும், ஆண்டானிடத்தில் அன்பினைச் செலுத்தி அருளினைப் பெறும் முறையினையும் தெரிவித்தோம். ஊக்கத்தோடு கேட்டு உளமகிழ்ந்தனர். கூட்டம் முடிந்தபின் கோயில்வழிபாட்டில் ஈடுபட்டோம். நிர்வாகிகள் வரலாறுகளை விளக்கிக் கூறினார்கள். சிவலிங்கப்பெருமான் மலைக்குகையில் மாட்சியொடு காட்சியளிக்கிறார். மக்கள் மனக்குகையில் எழுந்தருளி ஆணவப் பகையை அகற்றும் அண்ணல்குகைக்கோயிலில் வீற்றிருத்தலும் பொருத்தமே என எண்ணினோம். ஒரே கருங்கல்லில் அம்மையப்பர் உருவம் இடபாரூடராகக் காட்சியளிப்பதைக்கண்டோம். அருமையில் எளிய அழகினைப்போற்றினோம்.

அம்மையார் திருமுன்னர் சென்றோம், நண்ணினார்க்கு நல்லன் நம்மிறைவன் என்பதை அறிவிக்கும் குறியீடு முதலில் காட்சியளித்தது. அதுதான் வெள்ளித்தேர்விளக்கு, அதனில் நெய் நிறைந்த தீபம் ஒளிவிடுகிறது. வரலாறு வினவினோம். நூறாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த புதுக்கோட்டை மகாராஜா ஒருவர் கடல்பிரயாணம் செய்தாரென்றும், காற்றில் கலம் கவிழ்ந்தபோது தேவியை வேண்டினாரென்றும், கலங்கவிழ்ந்த போதும் மகாராஜா காப்பாற்றப் பெற்றார் என்றும், அதன் நினைவாகவே வெள்ளித் தேர்விளக்கு அமைக்கப்பெற்றது என்றும் விளம்பினார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தை எண்ணுபவர்கள், நெரூர் சாதாசிவ பிரம்மேந்திராள் அவர்களை மறக்கமுடியாது. அவர் எழுதிக்காட்டிய அக்ஷரமணலை மகாராஜாவம்சத்தினர் இன்றும் பூசித்துவருகின்றனர். சதாசிவபிரம்மேந்திரரைப் பூசிக்கவேண்டுமென மகாராஜா கேட்டுக்கொண்ட

480-

தாகவும் மௌனமாக இருந்த அப்பெரியார் அம்மையார் சந்நிதானத்தில் தூண்களிலிருந்த உருவமொன்றைக் குறிப்பினால் காட்டி அதில் தாம் இருப்பதாகவும் அதைப் பூசை செய்க என்றும் குறிப்பித்தனராம். அதுமுதல் இன்றும் ஆறுகால பூசை நடந்துவருகின்றது என்கின்றனர். தருமமும் தவமும் குறையுமானால் தாழ்வு ஏற்படும் என்பதையும் தெரிந்தோம். தங்கவிளக்குகளையும், விலைமதிப்பில்லா அணிகளையும், வெள்ளி வாகனங்களையும் கண்ட நாங்கள் சமஸ்தான அரசர்களின் பரந்த உள்ளத்தையும், கடவுள் உணர்ச்சியையும் அவர்கள் காலத்து வளத்தின் வாய்ப்பினையும் வாயாரப்பேசிமகிழ்ந்தோம்.

இரவு 8-மணிக்குச் சங்கராலயத்தில் பல அன்பர்களும் அறிஞர்களும் குழுமியிருந்தனர். எங்கள் பேச்சினைத் தொடங்கினோம். உயிர்கள் தன்செயலற்றபின் அடைக்கலம் விரும்புவதையும், அவ்வடைக்கலம் உயிர்களையே பற்றுமானால் ஓரளவினுக்கே பயனடைய முடியுமென்றும், அழியாப்புகழ்பெற்ற அண்ணலிடம் அடைக்கலம் புகுதலே என்றும் இன்பமாக வாழ வழியாமென்றும் புகன்றோம். தமிழ்நாடு திருபர் சுந்தரேசம் பிள்ளையவர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாத மக்களும் இப்பிரசாரத்தைக் கேட்கவேண்டும் அதைமுன்னிட்டு நாளை டவுன்ஹாலில் கூட்டம் நடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். (வரும்)

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மடத்தில்

தருமபுர ஆதீனப் பிரசாரத்திற்குப் பாராட்டு

இராமநாதபுர மாவட்டத்திலே கடந்த பதினைந்து நாட்களாக அருள்நெறித் திருக்கூட்டத்துடன் இயைந்து நின்று சமயப் பணியாற்றிய தருமை ஆதீனச் சமயப் பிரசாரக் குழுவினர்க்கு குன்றக்குடி, திருவண்ணாமலை மடத்தில் 6—8—53 அன்று ஓர் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. திருமுறை பாடி தொண்டர்கள் நகர்வலம் வந்தனர். யானைமேல் திருமுறை ஊர்வலம் நடந்தது. காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. N. சுப்பு ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திருப்புத்தூர், வக்கீல் திரு. இராமச்சந்திரம் பிள்ளை அவர்கள், அருள் நெறித் திருக்கூட்டக் கொடியை ஏற்றுவித்துப் பேசினார்கள்.

தருமை ஆதீனச் சமயப் பிரசாரக் குழுவினருக்கு இராமநாதபுர மாவட்ட அருள்நெறித் தொண்டர்கள் சார்பிலே ஓர் பாராட்டுரை தொண்டர் வி. திருநாவுக்கரசு அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது. தருமை ஆதீனச் சமயப் பிரசாரக் குழுவினரையும், சிறப்பாக அதனைத் தலைமைதாங்கி நடத்தும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்களையும், அவர்களது பணியையும் பாராட்டி திரு. அன்பு கருணையானந்தா, தில்லைக்கோவிந்தன் ஸ்ரீ சபாபதித் தம்பிரான் சுவாமிகள், திரு. கோபாலன் முதலியோர் பேசினார்கள். பிறகு,

குன்றக்குடி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள்

அருளிய ஆசியுரை.

“எம்மை இந்தப்பணியில் ஊக்குவித்தது திரு. வி. க. அவர்கள் எழுதிய “மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்” என்ற நூல்தான். சுவாமி விவேகாநந்தா அவர்கள் எழுதிய நூல்களும் உறுதுணையாக இருந்தன. தருமையில் 24-வது மகா சந்நிதானம் அவர்களின் காலத்தே அலுவலனாக வேண்டா வெறுப்புடன் பணிபுரிய நேர்ந்தது. இராமகிருஷ்ண மடத்திலே சென்று தொண்டாற்றலாம் என்ற என் உள்ளக் கருத்தினை அறிந்த - இப்போது எழுந்தருளியிருக்கும் 25-வது மகாசந்நிதானம் அவர்கள் எம்விருப்பப்படி ஆசிரமம் அளித்து ஏற்றுக்கொண்டார்கள். தருமை ஆதீனத்தாரின் அன்பையும், சமயப்பணியையும் மறக்கமாட்டோம். சிறப்பாக அருள் நெறித் தொண்டர்களாகிய நாம் அவர்களது சமயப்பணியை மறக்கவோ - மறுக்கவோ முடியாது. நாம் அங்கு வாழ்ந்த காலை இந்த சின்னப்பட்டம் கட்டவேண்டிய சூழ்நிலையில், எம்மை ஒன்றரை ஆண்டுகள் நெருங்கிப் பிடிவாதமாக அழைத்தார்கள். பொன் குவியலிலே, அதிகாரத்திலே அமர்ந்தால் நாம் விரும்பும் சமயப்பணிகளை, நாட்டுத்தொண்டுகளைச் செய்ய இயலாது என்ற நிலை ஏற்படும் என்ற ஐயமுடைய நாம் மறுத்துக்கூறியே வந்தோம். பிறகும் முயற்சிகள் விடாது நடைபெற்றன.

482

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவுளக் குறிப்பும், தெய்வசிகாமணியின் திருவருளும், முருகப் பெருமானின் திருவருளும் இந்நிலையைக் கூட்டுவித்தது. ஆகவே அன்னாரின் திசைநோக்கி வணங்குகின்றேன்.

இந்நிலையில் அருள்நெறித் திருக்கூட்டத்தை அமைத்து, பணியாற்றி ஓராண்டு முடியும் இச்சமயத்தில் தருமை ஆதீன சமயப் பிரசாரக்குழுவினர் இங்கு வந்துள்ளார்கள். அவர்களின் வருகை அருள்நெறித் திருக்கூட்டத்திற்கு, அதன் பணியை-தொண்டுகளை-பொறுப்புணர்ச்சியைச் சோதிப்பதாய் அமைந்தது. தருமைப் பிரசாரக் குழுவினரின் வருகை குறித்து அவசரச் சுற்றறிக்கைகள் விடுத்து ஆங்காங்கே உள்ள அருள் நெறித் தொண்டர்களையெல்லாம் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டினோம். அவர்களும் பொறுப்புணர்ச்சியுடன், அன்பும் ஆதரவும்காட்டி ஆங்காங்கே கூட்டங்களை சிறப்புற நடத்தி நம்மையும், அவர்களையும், நாட்டையும் கவர்ந்தார்கள். இதுபோல் ஏனைய மாவட்டங்களையும் நம் அருள்நெறித் தொண்டிலே முழுமனதுடன் ஈடுபடுத்த எல்லோரையும் கேட்டுக் கொள்கிறோம். தருமையில் எம்முடைய அணுக்க நண்பராயிருந்து, நான் செய்யவேண்டிய கடமைகளிலே சிலவற்றைத்தாமேசெய்து என்னை ஊக்குவித்த ஸ்ரீமத் சோமசுந்தர அடிகளார் இப்பிரசாரக்குழுவின் தலைமையை ஏற்று, தருமையின் குரல் குன்றக்குடியிலே அருள் நெறிக்குரலுடன் இணைந்து ஒலிக்கச் செய்ததற்கும், ஏனைய குழு உறுப்பினர்கட்கும், சிறப்பாக மருள் நீக்கியாருக்கும் மீண்டும் ஒருதரம் பாராட்டி, நன்றி செலுத்துகின்றோம்."

பிறகு ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தருமை ஆதீனப் பிரசாரக் குழுவினரும், விழாவிற்கு வந்திருந்தோரும் அலங்கரிக்கப்பட்ட முருகன் ஆலயம்சென்று தமிழில் அர்ச்சனைநடைபெற வழிபாடு செய்தனர்.

483

தருமை ஆதீன சமயப்பிரசாரக் குழுவினருக்கு

அருள்நெறித் திருக்கூட்டத்தொண்டர்கள் அளித்த பாராட்டுரை.

தருமை ஆதீனத் தொண்டு!

தண்டமிழ் நாட்டின் தலையான பகுதியாம் சோழவள நாட்டிலே, வற்றுவளம் தந்து மக்களை வாழ்விக்கும் காவிரியின் தென் கரையுற்ற தருமை ஆதீனம் சான்றோர் பலரை ஈன்று ஈந்து தனிப்பெருந் தலையான நற்பணி ஆற்றி வருவதை நாடறியும். குன்றின்மேலிட்ட நல்விளக்காய் ஒளிர்ந்து நாட்டை நல்வழிப்படுத்தும் சமயப் பெரியார்களை ஈன்றெடுத்த பெருமை அதற்கே உரியது. அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான விளக்காய் அமைந்து நின்று வடவரையும் தமிழராக்கி, நல்வழிப் படுத்தி, சைவ சமயப் பணிபுரிந்து, அழியாப்புகழ் பெற்று அமரவாழ்வு வாழும் குமரகுருபரரைத்தந்தது தருமை ஆதீனமே என்பதை நினைக்கும்போது மனம் எழுச்சிபெற்று அழியா மகிழ்ச்சியுறுவதை அறிஞருலகம் அறியும்; போற்றும். இன்று அத்தருமையில் வீற்றிருக்கும் அறிஞர் திலகம் - அருள் தந்தை ஸ்ரீ-லஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுள்ளத்தை - சமயப்பணியைப் போற்றாத நா இல்லை. கடல் கடந்து இலங்கை சென்று இறவாத இன்பப் புகழ் எய்தி, அன்புள்ளமே கொண்டு, தொண்டுணர்ச்சியின் சிகரமாய், நாத்திகரும் போற்றும் நன்னிலையில், அருள்நெறித் திருக்கூட்டம் என்ற இறை பணியை எங்களிடம் கொடுத்து சளைக்காது சமயப்பணியாற்றி எங்கள் தலைவராய் இங்கு எழுந்தருளியிருந்து நம்மை எல்லாம் மகிழ்விக்கும் திருப்பெருந் திரு தெய்வசிகாமணி அருணாசல அடிகளாரும் அவ்வாதீனம் ஈந்த கடல்முத்து - கனிச்சுவை, தெவிட்டாததேன் என்று கூறுவதிலே எமக்கும், அவ்வாதீனத்தார்கட்கும் தனிச்சிறப்பு உண்டென்பதை உணராத உள்ளம் இல்லை.

அஞ்ஞான இருள்நீக்கி மெஞ்ஞானக் கதிரவனாய் இங்கு வீற்றிருக்கும் திருப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகப் பெம்மானின் அருள் உள்ளம், நாத்திகம் பேசி நலிவுறும் இளைஞருலகையும். ஏனையோரையும் நல்வழிப் படுத்தும் நோக்கமுடன் தோற்றுவித்த எங்கள் அருள்நெறித்

திருக்கூட்டம் ஓராண்டுகாலமாய் நாட்டிலே நற்புகழுடன், வீடு வீடாய் பட்டினங்கள் முதல் பட்டிதொட்டிகள்வரை, குச்சி வீடு முதல் மச்சி வீடுவரை வீடுவீடாக ஆற்றிவரும் சமயத் தொண்டை, நாட்டுப்பணியை நாங்களே கூறுதல் மிகையாகும். தொண்டின் நெறிகாணும் செல்வ! பொன்மலர் நாற்றம் பெற்ருல் புவியில் புகழாதோர் உண்டோ? அவ்வண்ணம் தருமை ஆதீனம் தங்கள் பிரசாரக் குழுவினரை இம்மாவட்டத் திற்கு அனுப்பிவைத்தருளினர். அதன் தலைவராய் இளமையி லேயே ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற சைவத் திருமுறைகளின் பயிற்சியைப்பெற்றும், பைந்தமிழிலே வித்துவான் பட்டமும் பெற்று, கற்றதின் பயன் தொண்டின் நெறி நிற்றலே என்பதைக் கருத்தகத்தேகொண்டு இன்பத் தமிழையும், இசையையும் கருவியாகக்கொண்டு நாடெங்கும் நல்லன பரப்பி அருள்நெறி வளர்க்கின்ற தவச்செல்வமாய்க் காட்சியளிக்கின்ற சோமசுந்தர அடிகளாரே! தங்களுக்கும், ஏனைய தொண்டர்கட்கும் எங்களின் உளங்கலந்த பாராட்டு தலை அளிக்கின்ருேம்.

இவ்வண்ணம் நாட்டின் முன்னேற்றத்திலே, சமயப்பணி களிலே, இத்திருவண்ணுமலை ஆதீனமும் தருமை ஆதீனமும் என்றென்றும் கனியும் சுவையும்போல் - தமிழும் இனிமையும் போல் - மலரும் மணமும்போல் இயைந்து நின்று நாட்டை நல்வழிப்படுத்தும். இவர்களைப்போன்ற நல்லறிஞர்கள் பலரைக் கொண்டு என்றென்றும் சமயப் பணியாற்றிவர, சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழலை வணங்கி எம் உளங்கலந்த நன்றி யையும், பாராட்டையும் தருமை ஆதீனப் பிரசாரக் குழுவின ருக்குத் தெரிவிக்கின்ருேம்.

குற்றமனைத்தும் குணமெனக் கொள்வீர்!

பேரன்புடையோம் அல்லோம்; பிழையே செய்திருப்போம் தங்களுடைய தொண்டிற்கு எவ்வளவு அன்பும், ஆதரவும் கொடுக்கவேண்டுமோ அவ்வளவையும் கொடுத்தோம் இல்லை. எனினும் அன்பின் நலங்கருதி, நாட்டின் நலங்கருதி எளியோ மின் குறைபொறுத்து அன்பினை வழங்க வேண்டுகின்ருேம். எங்கள் தலைதாழ்ந்த வணக்கத்தைத் தருமை ஞானத்தந்தை திருவார் திரு, சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்குத் தெரிவிக்க வேண்டுகின்ருேம்.

485

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியில்

கழகத் தொடக்கவிழா நிகழ்ச்சி

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தின் இந்த ஆண்டுத் தொடக்கவிழா, கல்லூரி ஸ்ரீ அருள் நந்தி நிலையத்தில் 3—8—53 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களும், ஆசிரியர்களும், உள்ளூர் அன்பர்களும் கூடியிருந்தார்கள். கல்லூரி மாணவர் V. கல்யாணம் கடவுள் வாழ்த்துக்கூற விழா தொடங்கிற்று. கல்லூரித் தலைவர் பிர்மஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., அவர்கள், விழாத் தலைவர் மாயூரம் ரெவினியூ கோர்ட் ஆபீஸர் திரு. நடராசன் M. A., அவர்களுக்கு வரவேற்புரைகூறி மலர் மாலை அணிந்து உபசாரம் செய்தார்கள். பிறகு தலைவர் அவர்கள் "கோயிலுக்குச் செல்லும் அன்பர் தெய்வபக்தியில் ஈடுபட்டுக் கடவுளை வணங்குவர்; பூக்களைக் காண்போர் அதன் அழகில் ஈடுபடுவர்; விக்கிரங்களைக் காண்போர் அவைகளில் காணும் கலையழகில் ரஸிப்பர்; அப்படியில்லாமல் மண் கல் இவைகளைப் பற்றி இவைகளெல்லாம் எந்த ஊரிலிருந்து வரவழைக்கப் பட்டன என்று ஆராய்வதில்—இந்தப் பூவில் எத்தனை இதழ்கள் இருக்கின்றன என்று எண்ணிக் கணக்கு எடுப்பதில்-விக்கிரகம் செய்யத் தயாரித்த மண் எங்கிருந்து வந்தது என்று யோசிப்பதில் என்னபயன்? அதுபோலத்தான் கவிதைகளையும் படித்து ரஸிக்கவேண்டும்; அநுபவிக்கவேண்டும், அதுதான் அறிவாளி செய்யும் வேலை, அதுதான் மனத்திற்கு இன்பம் தரும். அவ்வாறின்றி எழுத்து எழுத்தாக, – பதம் பதமாகப் பிரித்து அழகைக் கெடுத்துவிடலாமா? கவிகளால் சிருஷ்டிக்கப்பட்ட காவியக் கோட்டைகளில் அதன் உபரிகையில் ஆனந்தமாக உலாவ வேண்டுவதுதான் நமது கடமை. கம்பன், பெர்னாட்ஷாபோன்ற மகா கவிகள் கட்டிய கோட்டைகளைப் பார்த்துப் பார்த்துப் படித்துப் படித்து ஆனந்தப்படவேண்டும். அவர்கள் கவிதைகளெல்லாம் தாமாகவே ஒரு வரம்பிற்குட்பட்டிருக்கும், வலிந்து வரம்பில் புகுத்தப்படும் கவிதைகள் படிப்போருக்குச் சுவைதரா. உண்மைக் கவிதைகளில் அறமார்க்கம் தாமாகவே காட்சியளிக்கும். வருங்காலப் புலவர்களாகிய உங்களால்தான் கவிதாரஸத்தில் மாணவர்களை ஈடுபடச் செய்யமுடியும்" என்றெல்

லாம் குறிப்பிட்டு, கம்பராமாயணம், புறநானூறு, செகப்பிரியர் நாடகம், தனிப்பாடல் ஆகியவைகளிலிருந்து இரண்டொரு கவிதைகளை எடுத்துக்கொண்டு கவிதாரஸத்தை மாணவர்கள் ரஸிக்குமாறு செய்தார்கள். தலைவர்களுடைய அன்றைய தொடக்கவிழாப் பேச்சு, எல்லோர்க்கும் பெருவிருந்தாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பிறகு கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நன்றியுரைகூறக் கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது. சந்தன தாம்பூலம் அனைவர்க்கும் வழங்கப்பெற்றது.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் இளவரசு ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கும், அதைச் சேர்ந்த வள்ளலார் மாணவர் இல்லம், திருவள்ளுவர் தொழிற்சாலை ஆகிய வைகளுக்கும் 20—7—53-ல் வருகை புரிந்தபோது எடுத்த படம். அருகில் நிற்பவர் தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டித்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.

487

திருச்சி - இராமநாதபுரம் ஜில்லாக்களில்:

தருமபுர ஆதீனப்பிரசார கோஷ்டியார் சுற்றுப்பிரயாணப் பிரசங்க விபரம்.

16—7—53 திருச்சி: திருச்சி சைவசித்தாந்த சபைக் கட்டிடத்தில் திரு. மருள்நீக்கியார் அவர்கள் "நாவுக்கரசர்", வித்துவான், ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "அருள்நெறி", திரு. நாகரத்தினம் பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

17—7—53 திருச்சி: திருச்சி மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் 7மணிமுதல் 9மணிவரையில் "தாயும் ஆனவன்" வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள், "முருகன் அருள்திறம்" திரு. மருள்நீக்கியார் அவர்கள்.

18—7—53 உய்யக்கொண்டான் திருமலை: கற்பகவிநாயகர் ஆலயத்தின் முன்னர் 8மணிமுதல் 11மணிவரையில் குன்றக்குடி ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் .- "ஆலய வழிபாட்டின் அவசியம்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "மங்கையர்க்கரசியார்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், திரு சுப்பையா பிள்ளை அவர்கள் நன்றியுரை.

19—7—53 திருவானைக்கா: ஸ்ரீ அகிலாண்டேசுவரிகோயில் சன்னதியில் 6மணிமுதல் 9மணிவரையில் "அன்பின் உறுதியால் அனைத்தையும் சாதிக்க முடியும்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. மருள்நீக்கியார் அவர்கள் தொடர்ந்து பேசினார்.

20—7—53 ஊரனூர்: ஸ்ரீ உத்தமநாதர் ஆலயத்தில் இரவு 7மணிமுதல் 9மணிவரையில் "திருஞானசம்பந்தர்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "ஆலய வழிபாடு" திரு. மருள்நீக்கியார் அவர்கள்.

488

21—7—53 புதுக்கோட்டை : மாதர்கள் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் சார்பில் வடக்கு ராஜவீதி வக்கீல் திருவாளர். D. சீனுவாச அய்யர் அவர்கள் இல்லத்தில் 5மணிமுதல் 7மணி வரையில் "திலகவதியார்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், திரு. மருள் நீக்கியார் அவர்களும் பேசினார்கள்.

புதுக்கோட்டை குலபதிபாலையா உயர்நிலைப் பள்ளியில் வக்கீல் திருவாளர். D. சீனுவாச அய்யர் அவர்கள் தலைமையில் 8மணிமுதல் 10½மணிவரையில் "உயர்ந்த வாழ்வு எது?" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "மணி வாசகர்" திரு. மருள்நீக்கியார் அவர்கள்,

22—7—53 திருக்கோகர்ணம் : திருக்கோகர்ணம் ஸ்ரீ பிரகதாம்பாள் ஆலயத்தில் 5½மணிமுதல் 7½மணிவரையில் "சுந்தரர் வாழ்க்கை" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "சமயவாழ்க்கை அறிவிப்பன" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "அன்பும் அருளும்" திருமதி. பிருந்தாதேவி அம்மையாரவர்கள்.

புதுக்கோட்டை சந்தப்பேட்டையிலிருக்கும் ஸ்ரீ சங்கரர் ஆலயத்தில் இரவு 8½மணிமுதல் 11மணிவரையில் "உயிர்த் தொண்டு" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "அடைக்கலம்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

23—7—53 புதுக்கோட்டை : புதுக்கோட்டை டவுன் ஹாலில் 6மணிமுதல் 8மணிவரையில் டாக்டர் திருவாளர். இராஜரெத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையில் "தெய்வ வழிபாடு அவசியமா?" ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளவர்கள், "துள்ளி வருகுது வேல்" திரு. மருள்நீக்கியார் அவர்கள்.

24—7—53 கீழச்சிவல்பட்டி : கீழச்சிவல்பட்டி பெரிய கோயில் சன்னதியில் 3மணிமுதல் 4மணிவரையில் "அன்பின் திறம்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குன்றக்குடி ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ மாணிக்கவாசக அடிகள், திரு. மருள்நீக்கியார் அவர்கள் ஆகியோர் தொடர்ந்து பேசினார்கள்.

4 8 9

குருவிக்கொண்டான்பட்டி கலைமகள் மன்றத்தில் 5½மணி முதல் 6½மணிவரையில் "திருஞானசம்பந்தர்" ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ மாணிக்கவாசக அடிகள், திரு. மருள்நீக்கியார் அவர்கள் தொடர்ந்து பேசினுர்கள்.

இராங்கியம்: நகரத்தார் விநாயகர் கோயிலில் 7½மணி முதல் 9½மணிவரையில் "திலகவதியார்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "திருநாவுக்கரசு" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ மாணிக்கவாசக அடிகள் தொடர்ந்துபேசினுர்கள். வித்துவான் திரு. V. S. தண்டபாணி அவர்கள் நன்றியுரை.

25—7—53 ஆ. தெற்கூர்: சிவன்கோயிலில் 4½மணிமுதல் 6½மணிவரையில் விசாலாக்ஷி கலாசாலை உதவித் தலைமை ஆசிரியர் திருவாளர். N. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் B. A., L. T., தலைமையில் "மாணவர் வாழ்வு" ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "ஆலய வழிபாடு" ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "தமிழர் கடவுள்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "சமய வாழ்வு" வித்துவான், திரு. க. தி. சுந்தரம் அவர்கள், "நாடும் சமயமும்" வித்துவான், திரு. இராமாநுஜம் அவர்கள்,

நெற்குப்பை: இரவு 7மணிமுதல் 10½மணிவரையில் நகரத்தார் மடத்தில் திருவாளர். N. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் B. A., L. T., தலைமையில் "அன்பும் அருளும்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "ஒன்றே கடவுள்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "சிலப்பதிகாரம்" வித்துவான், திரு. க. தி. சுந்தரமவர்கள், "சமயமும் வீரமும்" வித்துவான், திரு. இராமாநுஜம் அவர்கள், திரு. கரு. சிங்காரம் அவர்கள் நன்றியுரை கூறினுர்கள்.

26—7—53 ஒ. சிறுவயல்: பொன்னழகியம்மன் கோயிலில் மாலை 6மணிமுதல் 9மணிவரையில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தலைமையில் "அன்பும் அறமும்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், "ஆண்டான் கண்ட தெய்வம்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "நான் கண்ட கடவுள்" கீழச்சிவல்பட்டி, திரு. தெ. அழகப்பன்.

27—7—53 காரைக்குடி : நகரத்தார் சிவன்கோயிலில் மாலை 6½மணிமுதல் 9மணிவரையில் "சக்தியும் சிவமும்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "திருவாசகத்தில் அம்மையப்பர்" ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானம்" திரு. முத்துசிவன் அவர்கள் M. A., அழகப்பாகல்லூரி பேராசிரியர், "பகுத்தறிவு" திரு. சா. கணேசன் அவர்கள்.

28—7—53 தேவகோட்டை : நகரத்தார் பள்ளிக்கூடத்தில் மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரையில் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில், "சமயவாழ்வு" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "மாணவ சமுதாயம்" ஸ்ரீமத் சபாபதித் தம்பிரரன் சுவாமிகள் அவர்கள் "ஆண்டவனைக்காணல்" திரு. மருள்நீக்கியார் அவர்கள். தலைவர் அவர்கள் முடிவுரை நகரத்தார் சார்பாக D. R. அருணாசலம் அவர்கள் வரவேற்பும் நன்றியுரையும்.

29—7—53 திருவாடானை : ஆதி ரெத்தினேஸ்வரர் கோயில் மண்டபத்தில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. நா. விஸ்வநாதன் அவர்கள் திரு. மருள்நீக்கியார் அவர்கள், திரு. சா. கணேசன் அவர்கள் ஆகியோர் பேசினார்கள். ஸ்ரீ அய்யாமணிக் குருக்கள் அவர்கள் வரவேற்பும் நன்றியும்.

30—7—53 காளையார்கோயில் : சிவன்கோயில் முன்னர், திடலில் மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரையில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் "அன்பும் அருளும்" ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "உண்மை எங்கே" ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், "கருகாவூரன்" திரு. மருள்நீக்கியார் அவர்கள், கோயில் தர்மகர்த்தா திரு. நாராயணன் செட்டியார் அவர்கள் வரவேற்பும் நன்றியும்.

31—7—53 கோட்டையூர் : சிவன் கோயில் மண்டபத்தில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் ஸ்ரீமத், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், மாணிக்கவாசக அடிகள், திரு. மருள்நீக்கியார் முதலானவர்கள் பேசினார்கள். K. V. L. RM. இராமநாதன் செட்டியார் அவர்கள் நன்றியுரை

1—8—53 பள்ளத்தூர்: மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரையில் நகரத்தார் சிவன் கோயிலில் குன்றகுடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தலைமையில், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. மருள்நீக்கியார் அவர்கள், திரு. வித்துவான், முத்து வெங்கிடாஜலம் அவர்கள் ஆகியோர்கள் பேசினார்கள். நகரத்தார் சார்பாக S. M. இராமநாதன் செட்டியார் அவர்கள் வரவேற்பும் நன்றியும்.

2—8—53 வெற்றியூர்: வெற்றியூர் கோயில்முன், அரசமரத்தடியில் காலை 10 மணிமுதல் பகல் 1 மணிவரையில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், திரு. அன்பு கருணையானந்தா அவர்கள் ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. சிங்காரம் அவர்கள், திரு. வேலாயுதம் பிள்ளை ஆகியோர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஊர் மக்கள் சார்பாகத் திரு. வேலாயுதம் பிள்ளை அவர்கள் வரவேற்பும் நன்றியும் கூறினார்கள்.

அ. சிறுவயல்: 2 மணிமுதல் 3 மணிவரையில் முருகன் வாசகசாலையில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. ஆறுமுகம், திரு. கதாயுதம்பிள்ளை அவர்கள், ஷியார் புதல்வி சரோஜா ஆகியோர் பேசினார்கள். கதாயுதம் பிள்ளை அவர்கள் வரவேற்பும் நன்றியும்.

திருப்பத்தூர்: மாலை 6 மணிமுதல் 9 இரவு மணிவரையில் திருப்பத்தூர் வைரவசுவாமி கோயில் மண்டபத்தில் வக்கீல், திரு. இராமச்சந்திரம் பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. அன்பு கருணையானந்தா அவர்கள், திரு. தில்லை கோவிந்தன் அவர்கள் ஆகியோர் பேசினார்கள். சுப்பையாப்பிள்ளை அவர்கள் வரவேற்பும் நன்றியும் கூறினார்கள்.

3—8—53 சிவகெங்கை: சிவகெங்கை சிவன் கோயில் முன்னர், மாலை 6 மணிமுதல் 9 மணிவரையில், குன்றக்குடி

H92

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில். திரு. நல்லசாமி பிள்ளை B. A., B. L., அட்வகேட் வரவேற்பு. திரு. தில்லைக் கோவிந்தன் அவர்கள், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி கள் அவர்கள், திரு. மருள்நீக்கியார், பொன்னம்பலம் பிள்ளை அவர்கள், தூத்துக்குடி அன்பு கருணையாநந்தா அவர்கள் பேசினார்கள்.

4—8—53 **ஆத்தங்குடி**: சிவன் கோயில் முன்னர். 5-மணி முதல் 6¼-மணி வரையில். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், திரு. மருள்நீக்கியார் அவர்களும் பேசினார்கள்.

4—8—53 **கோனாப்பட்டு**: இரவு 7-மணி முதல் 9-மணி வரையில். கோனாப்பட்டு சிவன்கோயில் மண்டபத்தில். தலைமை ஆசிரியர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் திரு. அன்பு கருணையானந்தா அவர்கள், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், சபாபதித் தம்பிரான் சுவாமி கள் அவர்கள், திரு மருள் நீக்கியார் அவர்கள், திரு. தில்லைக் கோவிந்தன் அவர்கள் ஆகியோர் பேசினார்கள்.

5—8—53 **நேமத்தான்பட்டி**: திருநாவுக்கரசு வித்தியா லயத்தில் 5½-மணி முதல் 7-மணி வரையில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள், திரு. மருள் நீக்கியார், வித்துவான், திரு. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

5—8—53 **கொத்தமங்கலம்**: ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பி ரான் சுவாமிகள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள், திரு. மருள் நீக்கியார், வித்துவான், திரு. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் அவர்கள் முடிவுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

[வரும்.]

473

மதிப்புரை

1. இராமேசுவரம்: இது திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு. பெயர்க்காரணம், சிறப்பியல்புகள், சேதுபுராணத்தில் கூறுவது, சம்பந்தசுவாமிகள் அப்பர் சுவாமிகள் அருளிய தலப்பதிகக் குறிப்புக்கள், தீர்த்தங்கள், விசேடமான பகுதி இத்தகைய தலைப்புக்களில் இராமேசுவரத்தின் வரலாறு தரப்பட்டிருக்கிறது. தல வழிபாட்டின் இன்றியமையாமையும், மானுடப்பிறவியின் சிறப்பியல்பும் தோற்றுவாய் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சி தேவாரத்தில் இராமபிரான் இடம் பெற்றுள்ளார் என்பதை அனைவரும் நன்கு உணரச் செய்கிறது. உலர்ந்தால் உதிர்ந்துபோகும் மணல், சீதாபிராட்டியின் பாதிவிருத்தியம் இராமபிரானுடைய இறையன்பு என்ற இரண்டாலும் என்றும் மாறாத அழியாத இலிங்கத் திருமேனியாக எழுந்தருளியிருக்கின்றமையை எல்லோரும் அறிந்து உய்யச்செய்கின்றது.

யாத்திரை அவரவர்களுடைய பக்குவத்திற்கு ஏற்ற அநுபவங்களை அளிக்கும் என்பதை யாவரும் அறிவர். அந்த முறையில் ஸ்ரீ காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தவ ஒழுக்கம் குன்றாத சிவாநுபவச் செல்வர்களாதலின் எங்கும் எதனையும் எஞ்ஞான்றும் சிவமாகக்காணும் அவர்களது சிவாநுபவச் சிறப்பினை இந்தச் சிறுவெளியீடு அறிவிக்கிறது.

2. கந்தபுராணம்: தக்ஷகாண்டம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் வெளியீடு. முன்னைய இரண்டு பகுதிகளைப் போலவே மூன்றாம் பகுதியாகிய இவ்வெளியீடும் சிறப்பாக அமைந்துள்ளது. தணிகைமணி, இராவ்பகதூர் செங்கல்வராய பிள்ளை, M. A., அவர்கள் எழுதிய சிற்றாராய்ச்சியும் சேர்க்கப் பெற்றுள்ளது. அது பெரும்பயன் தரும் என்பதைப் படித்தோர் நன்கு உணர்வர். முன்னைய ஆறு காண்டங்களும் அறுமுகப்பெருமானது பெரும்புகழை விளக்குவன ஆதலின் அவை இரு பகுதியாக வெளியிடப்பெற்றன. சிவபராக்கிரமத்திற்கு எடுத்துக்காட்டான பல வரலாறுகள் எழுந்ததற்குக் காரணம் தக்கனது யாகம். அந்த யாகத்தின் விரிந்த வரலாற்

றைப் பெரும்பகுதியாகவும், கந்தனது விரத விபரங்களை ஒரு சிறு பகுதியாகவும் கொண்டு விளங்குவது தக்ஷகாண்டம். ஆகவே இது தனி வெளியீடாக அச்சிடப்பெற்றதுபாராட்டுக் குரிய பெரும்பணியிலும் சிவப்பணியாகும். தடித்த எழுத்தில் சிறந்த பாடல்களை அமைத்துக் காட்டியிருப்பது வாசிப்போர்க்குப் பெரும்பயன் தருகின்றது. வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் எழுதிய மதிப்புரையும் காசிமடம் இளவரசு, வித்துவான். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுதிய முன்னுரை நான்முகத்தில் உள்ளன. செய்யுள் முதற்குறிப்பகராதியும் பின்னர் தரப்பட்டிருக்கிறது. இது இவ்வாண்டு ஆனிமாமக வெளியீடாக வெளிவந்துள்ளது.

3. கொங்குநாடும் சமணமும்: கல்வெட்டுக்களைச் சமயக்கண்கொண்டும் ஆராய்வதில் நிகரற்று விளங்கும் கோவைகிழார் அவர்களால் எழுதப்பட்ட இந்தநூல்வெளிவந்திருப்பது தமிழ்நாட்டின் அதிர்ஷ்டம் என்று சொல்லலாம். அவ்வளவு சிறந்த நூல் இது. கொங்குநாடு சமணப்புலவர்கள் பலரைத் தோற்றுவித்துப் பெருமை கொண்டுள்ளது; அதுமட்டுமல்ல சமண நிலையங்கள் பலவற்றையும் தனக்குள் அகப்படுத்திக் கொண்டிருக்கிறது; அவைகளைப் பாதுகாத்துக்கொண்டு சில சமணக்குடும்பங்களும் வாழ்கின்றன என்கிற விஷயத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது இந்த நூல், சமணசமயம் என்ற தலைப்பில் காணப்படும் ஆராய்ச்சி ஆசிரியர் புலமைக்கு எடுத்துக்காட்டு. அதுபோலத்தான் விஜயமங்கலம் நெட்டைக் கோபுரத்தைப் பற்றியதும். 'கொங்குநாட்டிலும் சமணர்கள் இருக்கிறார்களா என்று படித்தவர்களும் இக்காலத்தில் கேட்கக்கூடும்?' என்று தொடங்குகிறது முன்னுரை. சமணச் சின்னங்கள் அழிந்து போகாதபடி பாதுகாத்து வைப்பதே மக்கள் கடமை; மக்கள் அந்தக்கடமையை உணர்ந்து அச்சின்னங்களைப் போற்றுவார்களாக' என்பதோடு பின்னுரை முடிகின்றது. பொருள் அகராதியும் இறுதியில் தரப்பட்டிருக்கிறது. கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரைநடை நூல்கள் வரிசையில் இதுவும் ஒன்று என்று சொல்லலாம். இத்தகைய சிறந்த நூலைப் பெறவேண்டுவோர் 'கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட், கோவை' என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்வார்களாக.

195

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஸு ஆவணி-மீ 1-உ முதல் 31-உ முடிய)

(17—8—53 முதல் 16—9—53 முடிய)

1. **மேஷம்**, அசுவதி, பரணி, கார்த்திகை ¼

மேஷராசி பலன் முதல் பகுதி மிச்ரமாயும், நடுப்பகுதி ரொம்ப சிரமங்களையும், கடைப்பகுதி வியவஹார பயத்தையும் தரும். பரணிக்கும், கார்த்திகைக்கும் ஆயுதபயமுண்டாகும். தொழிலாளிகள் உத்தியோகஸ்தர்கள் நடுத்தர வகுப்பார்கள் சிரமத்தின்பேரில் காலம் கழிப்பார்கள். திங்கள் செவ்வாய் சமமாகும்.

2. **விருஷபம்**, கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½

கார்த்திகைக்கும், மிருகசீர்ஷத்துக்கும், ஷ மாதம் மிகுந்த கஷ்டபலனைத்தரும், வியாதிபயம் வேலையாள்தொல்லை வியவசாய நஷ்டம் தேவபிராம்மண கோபம் காலிகன்று நஷ்டம், கிரிமினல்கேஸ் உற்பத்தி அபஜயம், இவைகளும், ரோஹிணி ஸம்பந்தப்பட்டவர்களுக்குச் சுபசோபனாதிகளும், நல்லோர்பெரியோர் ஆசியும், நஷ்டதன பிராப்தியும், தொழில் விருத்தியும் ஏற்படும். செவ்வாயும் புதனும் சுபம்தரும்.

3. **மிதுனம்**, மிருகசீரிஷம், ½ திருவாதிரை, புனர்பூசம். ¾

மிருகசீரிஷத்துக்குத் தர்மகைங்கரியம், தேவபிராம்மண பக்தி, ஸத்கர்மானுஷ்டானம், நஷ்டதன பிராப்தி, கிரய விக்ரய லாபம், ராஜாங்க உதவி முதலியவை கிட்டும். மீதி இரண்டுக்கும் ஸமபலனும் நடக்கும், அதிலும், புனர்பூசத்துக்கு ஏராள நஷ்டத்தையும் பெரிய வியவஹாரத்தையும் தரும். சனிக்கிழமை நலன் தரும்.

4. **கடகம்**, புனர்பூசம், ¼ பூசம், ஆயில்யம்.

பூசம் ஆயில்யம் இருநக்ஷத்திர பலனும் ஸந்தோஷத்தை தரும், புனர்பூசம் கஷ்டபலனைத்தரும், மூன்று நக்ஷத்திர பலனும் மாதக்கடைசியில் விசேஷ சௌகரியத்தையே செய்யும். வெள்ளி சுபமாகும்.

496

5. **ஸிம்மம்**, மகம், பூரம், உத்திரம். ¼

சென்ற மாதம் போலவே மூன்று நக்ஷத்திர பலனும் நடக்கும், வியவசாயிகளுக்கு அநேகவிதமான ஈதிபாதைகள் ஏற்படும். வியாபாரிகளும், பெரிய உத்தியோகஸ்தர்களும் நஷ்டமடைவார்கள். வித்யார்த்தி ஜயமடைவான். புதன் சுபமாகும்.

6. **கன்னி**, உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை.

உத்திரம், சித்திரை பூரா சுபமே நடக்கும். மங்களகாரியங்கள், ஸ்வதேச பிரயாணம், உத்யோக மேன்மை, கீர்த்திபத்திரம் கிடைக்கும் வியவஹார ஜயம், சத்துருநாசம், காரிய சித்தி, மனோல்லாஸம், பந்துமித்திராளுடன் சேர்க்கை, ஸந்தோஷ சமாசாரக் கேள்வி முதலியன நடைபெறும். ஹஸ்தம் 1-4. பாதங்கள் ஸரியாய் இராது. 2-3 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். நடுப்பகுதியில் பலகஷ்டங்களும் மனம் மாறுதலும் ஏற்படும் அது எதிர்கால அசுபத்தைக்காட்டும். புதன் விழாயன் சுபவாரமாகும்.

7. **துலாம்**, சித்திரை, ½ சுவாதி, விசாகம். ¾

சுவாதிக்குத் தெய்வபலம் ஓங்கும். அஸாத்தியமெல்லாம் சுலபமாகும். எங்கும் புகழும் பிரஸித்தமும் ஏற்படும். மற்ற இரு நக்ஷத்திர பலனும் ஸமமாகும். சுகதுக்கம் லாபநஷ்டம் எல்லாம் பகிர்ந்து ஸமமாகநடக்கும். வெள்ளிசுபவாரமாகும்.

8. **விருச்சிகம்**, விசாகம், ¼ அனுஷம், கேட்டை.

விருச்சிகராசிபலன் மாதப் முதல்பாதி மிகுந்த ஸந்தோஷத்தையும், மங்களத்தையும், தனலாபத்தையும், நூதன வியாபாரத்தையும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேர்தலையும் கீர்த்தியையும் தரும். பிற்பாதி மிகுந்த சிரமத்தையும் அபவாதங்களேயும், சத்துரு பாதையையும் உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

9. **தனுசு**, மூலம், பூராடம், உத்திராடம். ¼

பூராடத்துக்கு வியவஸாயிகள் தொங்கலேயும் நீசசண்டாள கலஹமும் வியவஹாரபயமும், காரிய விக்னமும் உண்டாகி மாதக்கடைசியில் பூர்ணஜயமளிக்கும். மற்ற இரு நக்ஷத்திரக்காரர்களுக்கும் ஸமபலனும் நடக்கும், லாபம்

குறையும், மனம் சாந்தியடையாது. வீண்தொல்லைகளையும் இடம் மாறலையும் தரும். வெள்ளி சுபவாரமாகும்

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

மகரராசிபலன் பூராவுமே சுபமாய் நடக்கும். உத்யோக லாபம் இடம் மாறல், நஷ்டதன பிராப்தி, தொழில் விருத்தி, வியவஸாயவிருத்தி, வேலையாள்சேர்க்கை, காலிகன்றுவாங்கல் கூட்டுத்தொழில் ஆரம்பித்தல், இல்லற சுகமடைதல், உல்லாச யாத்திரை செய்தல், மேலோர் பெரியோர் தரிசனம் கிடைத்தல், எங்கும் வெற்றியடைதல் முதலிய சுபங்களும் ஏற்படும். சுக்கிரவாரம் சுபவாரமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

பூரட்டாதிக்கு மஹோன்னத ஸந்தோஷம் பரஸ்தல வாஸத்தோடு இல்லறசுகம் நூதன வஸ்திராபரணச் சேர்க்கை, பந்துமித்திர ஸமாகமம், வாழ்த்துப்பத்திரம் கிடைத்தல், தேவதா குருபக்தி, நிதி தனம்கிடைத்தல், எதிர் பாராத காரியங்களெல்லாம் சுலபமாய் நடத்தல் முதலிய சுப பலன்களே நடைபெறும். ஞாயிறு திங்கள் சுபவார மாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசியில் எல்லோருமே சுகமடைவார்கள். வெகு நாளான கஷ்டங்கள் நீங்கும். தெய்வபலம் கிட்டும். ஸகல ஜனங்களுடைய அனுகூலமும் கிடைக்கும். மஹத்தான சிரமத்திலிருந்து விடுதலை ஏற்படும், வியவகாரம் ஜயிக்கும் நஷ்டதனம் வந்துசேரும், தொழில் ஓங்கும், மனம் சாந்தி யடையும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

குறிப்பு:— உலகில் பெரியோர்கள் நடத்தும் ஸத்கர்ம பலனால் துஷ்டர்களும் நலன் அடைவார்கள். ஆனால் ஸாது வேஷமும் கபட ஆஸ்திகமும் துவேஷ புத்தியும் வைத்துக் கொண்டு இருப்பவர்கள் எவ்வளவு நல்ல காரியங்களையும் தானதர்ம கைங்கரியங்களையும் தபஸையும் செய்துகொண்டு வந்தாலும் அவர்கள் கடவுளால் தண்டிக்கப்படுவார்கள். ஆதலால் ஸஜ்ஜனங்கள் கபடமில்லாமல் ஆஸ்திகத்தோடு எதையும் நடத்துவார்களானால் உலகமே மாறி எங்கும் கிருத யுகமாக நடக்கும். சுபம்.

பொறையார் சிவன்கோயிலில் வாரவழிபாடு

19—7—53 ஆதீனப் பிரசாரக் குழுவினரின் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட பொறையார் வாரவழிபாட்டுக் குழுவினர், 27—7—53 திங்கட்கிழமையன்று இரண்டாவது வாரவழிபாட்டு விழாவினைச் சிறப்புற நடத்தினார்கள். ஆதீனப் பிரசாரகோஷ்டியின் சார்பில் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்களும் கலந்துகொண்டனர்.

வாரவழிபாட்டின் சிறப்பினையும், அவசியத்தையும் வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் விளக்கிப்பேசினார்கள். வாரவழிபாடு, நால்வர் சரித்திரம், திருப்பதிகங்கள் ஆகிய ஆதீன வெளியீடுகளும் வந்திருந்தோர்க்கு வழங்கப்பட்டன. வழிபாட்டில் உயர் திருவாளர். ரங்கசாமி அய்யர் அவர்களும், உயர் திருவாளர். G. வீரப்ப பிள்ளை அவர்களும், 'சக்தி விலாஸ்' பஸ்சர்வீஸ் நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருக்கடவூர் தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆசிரியர் திரு. சாமிஐயா தேசிகர் அவர்கள் தக்க இன்னிசைக் கருவிகளுடன் மேற்கண்ட கூட்டங்களில் கலந்துகொண்டு தேவார இன்னிசை விருந்து அளித்தனர்.

தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில்

ஆடிப்பூர மஹோத்ஸவத் திருவிழா

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் உள்ளிட்ட ஆலயங்களில் ஆடிப்பூர மஹோத்ஸவ விழா 3—8—53 முதல் தொடங்கி மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. அங்கங்கும் ஆதீனப் பிரசார கோஷ்டியார் சென்று பிரசாரம் செய்துவருகின்றார்கள். திருமுறைப் பாராயணமும் நடைபெறுகின்றது. ஆடிமாதம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் அம்பாளுக்குச் சந்தனக்காப்பு அலங்காரமும், நவசக்தி அர்ச்சனை ஆகிய விசேஷ வழிபாடுகள் நடத்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உத்திரவு செய்துள்ளார்கள். அதன்படி நடந்துவரும் விசேஷ வழிபாட்டன்றும் ஏராளமான மக்கள் வந்து தரிசனம்செய்து இன்புறுகின்றார்கள். அன்றன்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளித் தரிசனம் செய்துவருகின்றார்கள்.

தருமபுரம் ஸ்ரீ தர்மபுரீசுவரசுவாமி கோயிலில் புதிதாகப் பிரதிட்டை செய்யப்பெற்ற ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்காதேவிக்கும் வெள்ளிக்கிழமைகளில் வெள்ளிக் கவசம் சாத்தி, நவசக்தி அர்ச்சனை செய்யப்படுகின்றது. சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் கூட்டம் கூட்டமாகவந்து அருச்சனை செய்வித்து வழிபாடு செலுத்திக்கொள்கின்றார்கள்.

ஆடிப்பூர விழாவில் நடந்த சொற்பொழிவுகள்

வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் :— 7—8—53ல் ரேடியோபுகழ், சாகித்யகர்த்தா, சிதம்பரம் பிரமஸ்ரீ *T.* நடராஜ தீக்ஷிதர் & பார்ட்டியார் இன்னிசைக் கச்சேரி. 8—8—53ல் தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "அம்மையின் அருள்". 9—8—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. *M.* ஆறுமுக தேசிகர் அவர்கள் "கருணைக் கண்". 10—8—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "கண்கண்ட தெய்வம்".

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் :— 7—8—53ல் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "உயிர்த் துணை". 8—8—53ல் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "காழிப் பிள்ளையின் கருணை". 9—8—53ல் தருமபுர ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் "ஒரு தாய்". 10—8—53ல் வித்துவான், திரு. *M.* ஆறுமுக தேசிகரவர்கள் "தேவி தோத்திரம்".

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் :— 7—8—53ல் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "கரும்பினிற் கட்டி". 8—8—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. *V. S.* குருசாமி அவர்கள் "உயிரோவியம்". 9—8—53ல் புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "வழிபாட்டின் பயன்". 11—8—53ல் தருமபுர ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. *C.* சிங்காரவேலு அவர்கள் "பழம்பாடற் பயன்".

ஆதீன தேவஸ்தானங்களில் விசேஷ வழிபாடு

மழைவளங் குன்றியதால் வளமிழந்து வாடிய மக்களின் உளம் குளிர, வறுமைப்பிணி அகல, இறையுணர்ச்சி பெருக, மகிழ்வோடு வாழ மழை பொழியச்செய்து திருவருள்பாலித்த எல்லாம்வல்ல இறைவனின் கருணைக்கு வியந்தும் இச்சுபிக்ஷ வாழ்வில் அனைவரும் நிரந்தரமாக வாழவேண்டியும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆணையிட்டருளிய வண்ணம் ஆதீனத்திற்குட்பட்ட எல்லா தேவஸ்தானங்களிலும் 17—7—53 அன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அருச்சனைகளும் நடைபெற்றன. ஆதீனத்திலுள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கும் சிறப்புவழிபாடு நடத்துவிக்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 9—8—1953.